# திருமறை திறவுகோல்

## *Bible Keys*

பாகம் 3 - Part 3

எழுதியவர் :

**J.C. சோட்** *(USA)*

வெளியிடுவோர் :

**கிருபையுள்ள வார்த்தை, மதுரை.**

**BIBLE KEYS** (Tamil)
PART III : 21-30 Lessons
Copyright 2010 - Kirubaiyulla Varthai®

First Printing in Tamil : May 2010
Publisher : P.C. Philemon Rajah, M.A.,M.Th.,
(Director - J.C. School of Evangelism)

For Copies :

**J.C. SCHOOL OF EVANGELISM**
45 C/1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625010.
Ph: 0452 - 2607026, Cell: 92 4421 4421

## பொருளடக்கம்
## Contents


| | | பக்கம் |
|---|---|---|
| திறவுகோல் 21 | கர்த்தருடைய பந்தி (The Lord's Supper) | 5 |
| திறவுகோல் 22 | (காணிக்கை) கொடுத்தல் (Giving) | 8 |
| திறவுகோல் 23 | கிறிஸ்தவ ஜீவியம் (Christian Living) | 11 |
| திறவுகோல் 24 | மார்க்கந்தப்பிப்போகும் கிறிஸ்தவன் (The Erring Christian) | 15 |
| திறவுகோல் 25 | உபவாசமிருத்தல் (Fasting) | 19 |
| திறவுகோல் 26 | திருமணம் (Marriage) | 22 |
| திறவுகோல் 27 | மத சம்பந்தமான விடுமுறைகள் (பண்டிகைகள்) (Religious Holidays) | 24 |
| திறவுகோல் 28 | மதப் பட்டங்கள் (Religious Titles) | 29 |
| திறவுகோல் 29 | தவறான உபதேசங்கள் (False Doctrines) | 33 |
| திறவுகோல் 30 | அடிப்படை திருமறை போதனைகள் (Basic Bible Teachings) | 37 |

## அஞ்சல் வழி பாடமாக இப்புத்தகத்தை பயன்படுத்துவோருக்கு சில வழிகாட்டல்கள்

திருமறைத் திறவுகோல்களின் கேள்வித் தாள்கள், தனியே கிழித்து எடுக்கும்படி இணைக்கப்பட்டுள்ளன. கேள்விகளுக்கான பதில்களை நிரப்பி, திருத்தி மதிப்பிடும்படி திருமறை ஆசிரியருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். தயவு செய்து பதில்களை தெளிவாக எழுதவும்; அதேபோல் உங்கள் பெயர் மற்றும் முகவரியையும் ஒவ்வொரு பாடத்தின் விடைத் தாள்களிலும் எழுதினால் அது உங்களை அடையாளப்படுத்தி, திருத்தப்பட்டு மதிப்பெண்களுடன் உங்களுக்கு அனுப்ப ஏதுவாகும்.

இப்பயிற்சி மூலமாக நீங்கள் பெரிதும் பயன் பெறுவீர்கள் என்று ஜெபித்து, பயிற்சி பெறும் உங்களை வாழ்த்துகிறோம். உங்களுக்கு பாடத்தைக் குறித்த கேள்விகளோ, சந்தேகங்களோ, மேற்கொண்டு விளக்கங்களோ தேவையாயின், உங்கள் பயிற்சித் தாள்களைத் திருத்துகிற ஆசிரியர்களை தயவு செய்து தயக்கமின்றி தொடர்பு கொள்ளுங்கள். திருமறையின் திருவார்த்தைகளை கற்றுக் கடைபிடிப்பதால் உண்டாகும் ஆசீர்வாதம் உங்கள் உள்ளத்திலும், இல்லத்திலும் நிலைத்திருப்பதாக.

**P.C. பிலேமோன் ராஜா**
(இயக்குனர் - J.C. சுவிசேஷப் பள்ளி)


Television Program

**கிருபையுள்ள வார்த்தை**
**தொலைக்காட்சி நிகழ்ச்சியை**
**தவறாது பாருங்கள்! பயனடையுங்கள்!!**



| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு காலை – 7.45 | தமிழன் | டி.வி.யில் |
| செவ்வாய் காலை – 6.15 | தமிழன் | டி.வி.யில் |

செய்தியாளர்: பிலேமோன் ராஜா M.A., M.Th.,
Director - J.C. School of Evangelism

# கர்த்தருடைய பந்தி
## Lord's Supper

கர்த்தருடைய பந்தியில் பங்குபெற ஏதுவாக ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள்தோறும் கிறிஸ்தவர்கள் கூடி வருவது அவசியம் என்று திருமறை போதிக்கிறது. ஆதிக்கிறிஸ்தவர்கள் இப்படித்தான் அனுசரித்தார்கள் என்பதற்கான முன் உதாரணம் நமக்கு உண்டு. "***வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்***" என்று வாசிக்கிறோம். (அப்.20:7)

கர்த்தருடைய பந்தி என்றால் என்ன? கர்த்தரை நினைவுகூரும்படி கொடுக்கப்பட்ட ஒரு இராப்போஜனமாகிய பந்தி. கிறிஸ்துவின் சரீரத்தை நினைவுகூரும்படி அப்பத்திலும், கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவுகூரும்படி (திராட்சை ரசமாகிய) பாத்திரத்திலும் பங்குபெறுவதாகும். கிறிஸ்துவே இந்த பந்தியை ஸ்தாபித்து, கட்டளையிட்டார். வசனப்பதிவு கூறுகிறதாவது: "***அவர்கள் போஜனம் பண்ணுகையில் இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து, நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து, நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள். இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.***" (மத்.26:26–28).

கொரிந்து பட்டண கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதும்போது முதலாவதாக, கர்த்தருடைய பந்தியை களியாட்ட விருந்தாக மாற்றியதை கடிந்து கொண்டதுடன், அதன் உண்மையான நோக்கத்தையும் விவரித்து எழுதுகிறார். நாமே அதை வாசிப்போமாக."***உங்களைப் புகழாமல் இதைக் குறித்து கட்டளை கொடுக்கிறேன்; நீங்கள் கூடிவருகிறது நன்மைக்கேதுவாயிராமல், தீமைக்கேதுவாயிருக்கிறதே. முதலாவது நீங்கள் சபையிலே கூடிவந்திருக்கும்போது, உங்களில் பிரிவினைகள் உண்டென்று கேள்விப்படுகிறேன், அதில் சிலவற்றை நம்புகிறேன். உங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும்படிக்கு மார்க்கபேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்க வேண்டியதே. நீங்கள் ஓரிடத்தில் கூடிவந்திருக்கும்போது***

*அவனவன் தன் சொந்த போஜனத்தை முந்திச் சாப்பிடுகிறான். ஒருவன் பசியாயிருக்கிறான், ஒருவன் வெறியாயிருக்கிறான். இப்படிச் செய்கிறது கர்த்தருடைய இராப்போஜனம்பண்ணுதலல்லவே. புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா? தேவனுடைய சபையை அசட்டை பண்ணி, இல்லாதவர்களை வெட்கப்படுத்துகிறீர்களா? உங்களுக்கு நான் என்ன சொல்லுவேன்? இதைக் குறித்து உங்களைப் புகழ்வேனோ? புகழேன். நான் உங்களுக்கு ஒப்புவித்ததை கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன். என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப் பட்ட அன்று இராத்திரியிலே, அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு, நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து இந்த பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. நீங்கள் இதிலே பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க எவன் அபாத்திரமாய் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத் தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான். இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்"* (1கொரி.11:17–30)

இந்த தொடர் வசனத்தில் சில உண்மைகளைக் கண்டறிவோமாக.

1. கொரிந்து பட்டணத்து சபையாருக்குள் இருந்த பிரிவினைகளை பவுல் கடிந்து கொள்கிறார்.

2. கர்த்தருடைய பந்தியை ஒரு களியாட்டு விருந்தாக, கொரிந்தியர்கள் பயன்படுத்தியதையும் பவுல் கண்டிக்கிறார். தங்கள் விருந்துகளை அவனவனுடைய வீடுகளிலே புசிக்கும்படி அவர்களுக்குச் சொல்லப்பட்டது. ஆனால் கர்த்தருடைய பந்தியிலே பங்குபெற வரும்போது, தேவனை தொழுதுகொள்ளும்படியாய் வரவேண்டுமேயன்றி, விருந்து உண்பதற்கல்ல என்றும் சொல்லப்பட்டது.

3. தாம் அவர்களுக்கு ஒப்புவித்ததை கர்த்தரிடத்தில் பெற்றுக்

கொண்டதாகக் குறிப்பிடுகிறார்.

4. கர்த்தருடைய பந்தியை அவர் கொடுக்கும்போது, கர்த்தர் சொன்ன வார்த்தையையும் குறிப்பிட்டார்.

5. அபாத்திரமாய் பங்குபெறுகிறவன் கிறிஸ்துவின் இரத்தத்தைக் குறித்தும், சரீரத்தைக் குறித்தும் குற்றமுள்ளவனாயிருப்பான். மற்றொரு விதத்தில் அவிசுவாசமுள்ள கிறிஸ்தவன் (ஆத்மாவில்) இழந்தவனாக்கிறான்.

6. எனவே பங்குபெறுபவர் தாம் பங்குபெற பாத்திரமுள்ளவர்தானா இல்லையா என்பதை முன்கூட்டியே சோதித்தறிந்து பங்குபெற வேண்டும். அதாவது, அந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்பாகவே தேவனோடு தன்னை சரிப்படுத்திக் கொண்டு வரவேண்டும்.

7. ஒரு தவறு செய்து கொண்டிருக்கும் கிறிஸ்தவன், அல்லது அவிசுவாசமுள்ள ஒரு கிறிஸ்தவன் தொடர்ந்து பந்தியில் பங்குபெறுவது, அவர் தமக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி (அப்பத்தை) புசிக்கவும், (பாத்திரத்தில்) பானம்பண்ணவும் செய்கிறார். அப்படிப்பட்டவர்களுடைய பாவங்களை கர்த்தருடைய பந்தி நீக்கிப்போட்டு, அவரை இரட்சிப்பதில்லை எனலாம். ஏனெனில் அவர் மனந்திரும்பாத பட்சத்தில் அவர் (தன் ஆத்துமாவை) இழந்தவனாகிறார்.

கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவது மிகவும் வினயமான ஒரு காரியம். அதைப் பரிசுத்தமானதும், புனிதமானதாகவும் கருத வேண்டும். எனவே, இப்பந்தியில் பயபக்தியுடன்கூடிய தாழ்மையுடன் கிறிஸ்துவின் பலியை நினைவுகூர வேண்டும்.

கிறிஸ்தவன் கர்த்தரை தொழுதுகொள்ளும்படிக்கு ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவது மாத்திரமல்ல, மறுபடியும் கிறிஸ்து வரும்வரைக்கும் அவரை நினைவுகூரும்படிக்கும் பங்குபெற வேண்டும். ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் பங்குபெற ஏதுவாக ஒருவன் போதியளவு மனதைப் பக்குவப் படுத்தாதிருந்தால், அவன் எப்படி நினைவுகூரக்கூடும்? வருடத்திற்கு ஒரு முறையோ, மாதத்திற்கு ஒருமுறையோ அல்லது இரண்டு வாரத்திற்கு ஒருமுறையோ பங்குபெறுவது போதுமானதல்ல. கிறிஸ்தவன் ஒவ்வொரு வாரத்தின் முதல்நாளிலும் தான் விசுவாசத்திலும், உண்மையிலும் அவர் வரும்வரை அவரைச் சார்ந்திருப்பதிலும், நிலைத்திருக்க ஏதுவாக பார்த்துக்

# (காணிக்கை) கொடுத்தல்
## Giving

திருமறையின் தெளிவான போதனை ஒன்று உண்டு என்றால் அது கொடுத்தலைப் பற்றியது எனலாம். இக்கருத்தை வலியுறுத்தும் வசனங்கள் ஏராளம். கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாள் தோறும் எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்து வைக்க வேண்டும் என்கிற தேவனுடைய கட்டளைக்கு நாம் கவனம் செலுத்தப் போகிறோம். இன்னொரு வார்த்தையில் சொன்னால் கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள்தோறும் கொடுக்க வேண்டும் அல்லது காணிக்கை செலுத்த வேண்டும். பவுல் "நான் வந்திருக்கும்போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும் தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன்" என்று குறிப்பிடுகிறார் (1கொரி.16:2).

பவுல் சொல்லியிருப்பதை ஒவ்வொரு சொற்றொடராக பகுத்துப் பார்ப்போம்.

1. **"வாரத்தின் முதல் நாள்தோறும்"** கொடுத்தல் இடம் பெற வேண்டிய நாள் இதுதான். வாரத்தின் வேறெந்த நாளையும் குறிப்பிடாமல், ஏன் வாரத்தின் முதல் நாள்? அப்படிச் செய்ய வசதியான நாள் இதுதான் என்றும், கிறிஸ்தவர்கள் தேவனை தொழுதுகொள்ள இந்த நாளிலேதான் கூடி வரும் நாளாகிறது என்றும் அறிகிறோம். கூட்டம் கூடும்போதெல்லாம் காணிக்கை எடுப்பதை சிலர் வழக்கமாக கொண்டுள்ளனர் என்பது நிதரிசனமான உண்மை. ஆகிலும் தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய நாளாகிய வாரத்தின் முதல் நாளை குறிப்பாகச் சுட்டிக் காட்டுகிறார். வசனத்தின்படி நாம் நடக்கிறவர்களானால், வாரத்தின் முதல்நாளில் தான் நாம் கொடுக்க வேண்டும்.

2. **"அவனவன்"** இது யாரைக் குறிக்கிறது? கிறிஸ்தவர்களுக்கு அவர் எழுதியிருக்கிறபடியால், ஒவ்வொரு கிறிஸ்தவனும் காணிக்கை கொடுக்க வேண்டும் என நாம் காண்கிறோம். கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தருடைய இராஜ்யத்தில் அங்கத்தினர்களாயிருப்பதால்,

அவர்கள் தான் சத்தியத்தைப் பரப்பவும் வேண்டியவர்கள். இந்த ஊழியத்துக்குப் பணம் தேவை; எனவே சபையின் ஊழியம் தொடர்ந்து நடைபெற, கிறிஸ்தவர்கள் கொடுக்க வேண்டும்.

**3. "எதையாகிலும் சேர்த்து வைக்கக்கடவன்"** கிறிஸ்தவர்கள் தங்களிடம் உள்ளதைக் கொடுக்க வேண்டும் என்பதை எளிமையான ஆலோசனையாக இது சொல்லுகிறது. எப்படியாயினும், இது அநேக காரியங்களைக் குறித்துப் பேசுகிறது. அதாவது, உணவு மற்ற உடமைகள் போன்றவற்றைக் கொடுக்கலாம்.

**4. "தன் தன் வரவுக்குத்தக்கதாக"** கிறிஸ்தவன் தன் வரவுக்குத் தக்கதாக கொடுக்க வேண்டியவன். தனக்கு வரவு எதுவும் இல்லையெனில் அவன் கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதில்லை. ஆனால் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும்போது, அவன் கர்த்தருக்கு கொடுக்கிற பங்கை அவன் கொடுக்காமல் வஞ்சிக்கக்கூடாது. உண்மையான ஆபத்து இங்கேதான் இருக்கிறது. அதே நேரத்தில், எவ்வளவு கொடுக்க வேண்டும் என்ற ஆலோசனையும் கொடுக்கப்படுகிறது. பழைய ஏற்பாட்டு பிரமாணத்தின்கீழ் யூதர்கள் தங்களுக்குக் கிடைக்கும் எல்லாவற்றிலும் பத்தில் ஒரு பங்கு (தசம பாகம்) செலுத்தும் படி பணிக்கப்பட்டனர்; ஆனால் நாமோ அதைக் காட்டிலும் சிறப்பானதொரு பிரமாணத்தின் கீழ் வாழ்கிறபடியாலும், மேன்மையான வாக்குத்தத்தங்கள் நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறபடியாலும், நமது வருமானத்தில் பத்தில் ஒரு பங்குக்குக் குறைவாக கொடுத்தால் பிறகு நாம் எப்படி கிறிஸ்தவனாக இருக்க முடியும்? எனவே நாம் அதிகமாகக் கொடுக்க விரும்பவேண்டும்.

**5. "நான் வந்திருக்கும்போது பணம் சேர்க்குதல் இராதபடிக்கு"** கொரிந்தியர்கள் தங்கள் காணிக்கைத் தொகையை தான் வரும்போது எல்லாத் தேவைகட்கும் பகிர்ந்தளிக்கத் தக்கதாக தயார் நிலையில் வைத்திருக்க ஏதுவாக வாரத்தின் முதல் நாள் தோறும் சேர்த்து வைக்கும்படி பவுல் கூறுகிறார். இன்று வாரத்தின் முதல் நாள் தோறும் நாம் கொடுத்து, ஊழியத்திற்குத் தேவைப்படும்போது அப்பணத்தை நாம் பகிர்ந்தளிக்க வேண்டும்; பணம் தயாராக இல்லாமையினால், கர்த்தருடைய ஊழியம் பாதிக்கப்படக்கூடாது.

ஆக, ஆவிக்குரிய கொடுத்தலில் எவ்வளவு பெரிய காரியம் அடங்கியுள்ளது, என்பதைப் பாருங்கள். 1கொரிந்தியர் 16:2 –ல் கூறப்பட்டுள்ளது போலவே மற்ற இரு வசனப்பகுதிகளிலும் கூறப்பட்டிருப்பதும் உண்மையானது என்பதைக் கவனிக்க வேண்டும். இரண்டாம் முறை அதே கொரிந்தியர்களுக்கு பவுல் எழுதும்போது, அவர், "பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான்; பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்." என்று கூறுகிறார் (2கொரிந்தியர் 7:6,7). இதன் பொருள்: " எவ்வளவு குறைவாய்க் கொடுக்கிறோமோ அவ்வளவு குறைவாய் ஆசீர்வதிக்கப்படுவோம். எவ்வளவு அதிகமாய்க் கொடுக்கிறீர்களோ அவ்வளவு அதிகமாய் ஆசீர்வதிக்கப் படுவீர்கள். மேலும் ஒரு கிறிஸ்தவன் தான் மனதில் நியமித்தபடியே கொடுக்க வேண்டியவன். இப்படிக் கொடுப்பதினால், அவன் விசனமாகவோ அல்லது கட்டாயமாகவோ தான் கொடுப்பதாக உணர வேண்டுவதில்லை; மாறாக அவன் உற்சாகமாக கொடுக்க உதவுகிறது.

மேற்குறித்த கருத்துகளுக்கு ஒப்பாக கர்த்தருடைய வார்த்தைகளை கிறிஸ்தவன் எப்பொழுதும் நினைத்துக் கொள்ள வேண்டும். "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" (அப்போஸ்தலர் 20:35).சிலர் இவ்வாக்கியத்தை அப்படியே மாற்றி, கொடுக்கிறதைப் பார்க்கிலும், வாங்குவதே பாக்கியம் என்று கூறுவதுண்டு. நாம் இந்தக் குற்றத்திற்கு உடன்பட வேண்டாமே. திருமறை கூறும் விதமாக ஒருவன் கொடுக்காவிட்டால், அவன் கிறிஸ்தவன் என்று தன்னைச் சொல்லிக் கொள்ளக்கூடாது. மாறாக, மேலும்மேலும் கொடுக்கவே கற்றுக் கொள்வான். தனக்குண்டானவைகளை மட்டும் அவன் கொடுக்காமல், தன்னையே ஒப்புக் கொடுக்கும்போது இவ்வுலகத்திலும் ஆசீர்வாதம் பெறுவான். கர்த்தர் அவனுக்கு நித்திய ஜுவனை அளிக்கும் நாளிலும் பிரதிபலனை அடைவான். மனிதன் விதைப்பதையே அறுப்பான் என்பதை மனதில் வையுங்கள்.

# கிறிஸ்தவ ஜீவியம்
## Christian Living

ஒருவரும் உலகில் கிறிஸ்தவராகப் பிறப்பதில்லை. ஒருவர் தன்னைக் கிறிஸ்தவர் என்று செல்லிக் கொள்வதால் மட்டும் கிறிஸ்தவனாக இருப்பதுமில்லை. ஆனால் கிறிஸ்தவராக மாறும்படி கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படியவும், தொடர்ந்து கிறிஸ்தவராக இருக்கும்படி கிறிஸ்தவ ஜீவியத்தை, ஜீவிக்கவும் வேண்டும்.

பெந்தெகொஸ்தே நாளில், முதல் மனமாற்ற நிகழ்ச்சிக்குப்பின்பு பதிவேடு (வசனம்) கூறுகிறதாவது, "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாகத் தரித்திருந்தனர்" (அப்போஸ்தலர் 2:42).

புதிய ஏற்பாட்டின் பெரும்பகுதி கிறிஸ்தவர்களை ஊக்கப்படுத்தி கர்த்தரிடத்தில் உண்மையாய் இருக்கும்படி கொடுக்கப்படுகிற அறிவுரைதான். முதலாவதாக, இது குறித்து பேசுகிற பொதுவான வாக்கியங்களை வாசிப்போம்; உதாரணமாக "ஆகையால், எனக்கு பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக (1கொரி 15:58). "அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் என்கிறார்" (யாக்கோபு 1:22). அடுத்து, "...அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" என்ற வாக்கியமும் சொல்லப்படுகிறது (பிலிப்பியர் 2:12).

அடுத்து, கிறிஸ்தவ ஜீவியத்தை வாழப் போகிறவர்களிடம் குறிப்பாக என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதைக் காணப் போகிறோம். அவருடைய ஜீவியத்தின் முக்கியமான அம்சங்களில் ஒன்று தேவனைத் தொழுது

கொள்வது. கிறிஸ்தவன் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கூடிவந்து தேவனை துதிக்க வேண்டியவன்; ஆதலால், அவனுக்கு அறிவுரையாக, "சபை கூடி வருதலை...விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்தி சொல்லக்கடவோம்" என்று சொல்லப் படுகிறது (எபிரேயர் 10:25) .அவன் ஒரு தூய்மையான வாழ்க்கையை வாழ வேண்டியவன். யாக்கோபு சொல்லுவதை கவனியுங்கள், "திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது." (யாக்கோபு 1:27). இழந்து போனவர்களை (ஆத்துமாக்களை) சுவிசேஷத்துடன் சந்திப்பது கிறிஸ்தவனின் கடமை. இக்காரணத்தினால்தான், சுவிசேஷத்தை போதிக்கவும், பிரசங்கிக்கவும் வேண்டும் என்று கிறிஸ்து கட்டளையிட்டார். இதைக்குறித்து பவுலும் வசனத்தை பிரசங்கம் பண்ணும்படி அறிவுறுத்துகிறார் (மாற்கு 16:15; 2தீமோத்தேயு 4:2).

கர்த்தருக்கென வாழ்வதில் இரண்டு பக்கங்கள் உண்டு. கிறிஸ்தவன் தனது வாழ்க்கையில் செய்யக்கூடாத சிலகாரியங்கள் உண்டு; அவரது வாழ்க்கையில் காணப்பட வேண்டிய சில காரியங்களும் உண்டு. மாம்சத்தின் கிரியைகள், ஆவியின் கனிகள் எவை என்று பட்டியலிட்டு, பவுல் நமது கவனத்தை ஈர்க்கிறார். "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாய் இருக்கின்றன; அவையாவ விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காம விகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே சொன்னது போல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள்

மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். நாம் ஆவியினால் பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம். வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கக் கடவோம்". என்று வாசிக்கிறோம் (கலாத்தியர் 5:19–22). மீண்டும் பவுல் அப்போஸ்தலன், "ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும், லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும், நீதியும், தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி" என்று கூறுகிறார் (தீத்து. 2:11,12). இப்படியாக கிறிஸ்தவன் என்ன செய்யவேண்டும் என்று சொல்வது மட்டுமல்லாது என்ன செய்யக்கூடாது என்றும் சொல்லி, இரண்டுமே கிறிஸ்தவ வாழ்வுக்கு முக்கியமானது என்று கூறப்படுகிறது.

கிறிஸ்தவ ஜீவியத்தை முறைப்படுத்த ஏதுவானவற்றை குறிப்பான சிலவற்றைக் காண்போம். ஒருவன் முதலாவதாக தேவனிடத்தில் அன்பு கூற வேண்டும் (மத்தேயு 22:37). தன்னைப் போல பிறனையும் நேசிக்கிற சுபாவமுடையவராயிருக்க வேண்டும் (மத்தேயு 22:39). தேவனுடைய வசனத்தை அவன் மதிக்க வேண்டும் (வெளி. 22:18,19). ஜெபிக்கக் கூடியவனாயிருக்க வேண்டும் (1தெசலோனிக்கேயர் 5:17). தனது கடன்களை அவர் அடைக்க வேண்டும் (ரோமர் 13:8). எல்லாவற்றிலும் அவன் நேர்மையுள்ளவனாயிருக்க வேண்டும் (ரோமர் 12:17). "தனது குடும்பத்தை" நன்றாய் நடத்த வேண்டும் (ரோமர் 5:8). பொதுவாக, எல்லாவற்றிலும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றக் கூடியவனாயிருக்க வேண்டும் (மத்தேயு 7:21). எல்லாவற்றையும் கர்த்தருடைய நாமத்திலே செய்ய வேண்டும் என்று பவுல் குறிப்பிட்டார் (கொலோசெயர் 3:17).

கிறிஸ்தவ ஜீவியம் என்பது அவ்வளவு எளிதான ஒரு வாழ்க்கையல்ல. ஒருவன் கிறிஸ்தவனாக மாறும்பொழுது அவனுக்கு வேலை வாய்ப்பு உத்திரவாதமோ, சுலபமான வாழ்வோ, உறுதியளிக்கப்படுவதில்லை.

அவனுக்கு எந்த ஒரு பிரச்னையும், உபத்திரவமும் வராது என்று பொருளல்ல. கிறிஸ்தவனாக மாறி கிறிஸ்தவ ஜீவியத்தை முறையாக வாழ்வது, ஒருவனுக்கு இரட்சிப்பையும் வாழ்நாள் முழுவதும் ஆசீர்வாதத்தையும் கர்த்தர் அளிப்பார்; என்றாலும் உலகம் அவனது வழியில் வரும் என்றோ பொருளல்ல.

ஆதலால்தான் ஒருவர் கிறிஸ்தவனாக மாறுவதற்கு முன் செல்லுஞ் செலவை கணக்குப் பார்க்க வேண்டும். தான் ஒப்புக் கொடுக்க தயாராயிருக்க வேண்டும். மாய்மாலக்காரனாயிராமல் கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்தவனாயிருக்க வேண்டும். ஒருவரையும் வஞ்சியாதபடி மனுமக்களுக்காக நேர்மையுடன் உதவி செய்யக் கூடியவனாயிருக்க வேண்டும். விசுவாசமுள்ள வாழ்க்கையை வாழத் தவறினால், அவன் விசுவாசத்திலிருந்து விழுந்து இழுந்து போனவனாவான்.

விசுவாசமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்பவனே பந்தய பொருளை பெறுவான் என்று திருமறை கூறுகிறது. கிறிஸ்தவ பந்தயத்தில் பங்கேற்க ஒருவர் நுழையும்போது, பந்தயப் பொருளுக்காக ஓட வேண்டும்; அதைப் பெறும் வரை ஓட்டத்தை நிறுத்திவிடக்கூடாது. கிறிஸ்தவனுக்கு "மரண பரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்" என்ற வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. (வெளி. 2:10)

# மார்க்கந்தப்பிப் போகும் கிறிஸ்தவன்
## The Erring Christian

கிறிஸ்தவன் கிருபையிலிருந்து விழுந்து போவது சாத்தியமா? அதாவது ஒருவன் (கிறிஸ்தவன்) தொடர்ந்து பாவம் செய்து, இறுதியாக இழந்து போனவனாவது சாத்தியமா? அநேகரும் இல்லை என்றே கூறுவர்; ஆனால் திருமறையோ வலியுறுத்தி, ஆம் என்று சொல்லுகிறது. ஒரு கிறிஸ்தவன் விசுவாசத்திலிருந்து விலகி, விழுந்து போகட்டும் என்பது இதன் பொருளல்ல; மாறாக, அவன் விழுந்துப் போக சாத்தியக்கூறுகள் உண்டு; இப்படி ஏற்கனவே நடந்துள்ளது, மறுபடியும் நடக்க வாய்ப்புண்டு என்று பொருள்.

புதிய ஏற்பாடு பேசும் ஒவ்வொரு எச்சரிப்பின் வசனமும், தேவனுடைய பிள்ளையாக இருக்கும் ஒருவன், மார்க்கந்தப்பியவனாக மாறுவதற்கு சாத்தியமுண்டு என்ற முறையில் பேசுகிறது. அப்படியில்லாவிட்டால், ஏன் எச்சரிக்கப்பட வேண்டும்? ஒவ்வொரு நேர்மாறான கட்டளையும், ஒருவர் தான் இழந்து போகுமளவுக்கு பாவம் செய்யக் கூடும் என்பதற்காகத்தான். அப்படிப்பட்ட கட்டளைகளை ஒரு கிறிஸ்தவன் செய்யத் தவறும் பொழுது என்ன நடக்கும்? அவன் தேவனுக்கு கீழ்படியாமல் போகிறான் என்றும், அப்படி செய்வதால் அவன் இழந்து போனவன் என்றும் பொருளல்லவா? உண்மை அது தான்.

பின்வரும் உண்மைகள் சத்தியமானவைகள் மட்டுமல்ல, அந்த உண்மையை நிலைநாட்ட தவறிக் கொண்டிருக்கும் கிறிஸ்தவன் தனது ஆரம்ப அன்புக்கு மீட்கப்பட திருமறை கொடுக்கும் உபதேசங்களை பின்பற்ற வேண்டும். யாக்கோபு "நீங்கள் சொஸ்தம் அடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் (ஜெபம்) பெலனுள்ளதாயிருக்கிறது", என்று குறிப்பிட்டார். இங்கு மனந்திரும்ப வேண்டுமென்பதை குறிப்பிட்டுச் சொல்லாவிட்டாலும் அதன் பொருளை

உள்ளடக்கிப் பேசுகிறது. அப்படிப்பட்டவன் "தனது பாவத்திலிருந்து மனந்திரும்பி, அவைகளை அறிக்கையிட வேண்டும். தான் ஆவிக்குரிய ரீதியில் மன்னிக்கப்பட அல்லது ஆவிக்குரிய சுகமடைய ஜெபம் பண்ண வேண்டும்".

இது நம்மை பின்வரும் காரியங்களைச் சொல்ல வைக்கிறது. ஒருவர் தனது இருதயத்தில் பாவம் செய்திருந்தால் அந்தப் பாவத்திலிருந்து அவர் மனந்திரும்பி, தேவனிடத்தில் அறிக்கையிட்டு, அவருடைய மன்னிப்பைக் கோர வேண்டும். தனது அயலானுக்கோ, நண்பனுக்கோ எதிராக அல்லது தெரிந்து ஒருவன் பாவஞ் செய்தால் அவன் தனது பாவத்தை சம்பந்தப்பட்ட நபரிடம் போய் சங்கதிகளைப் பேசி சரி செய்ய வேண்டும். சபைக்கு பொதுவாக தெரிய வந்தோ அல்லது அந்த சமுதாயத்தின் மக்களுக்கு தெரிய வந்தோ பாவம் செய்திருந்தால், அவன் அந்தச் சங்கதியை சபைக்கு முன்பாகக் கொண்டு செல்ல வேண்டும். மனந்திரும்புதல் இயல்பாகவே அப்படிச் செய்ய வைக்கும். யாக்கோபு 5:16–ல் அந்தப் பாவத்தால் சம்பந்தப்பட்டவர்கள் ஒருவருக்கொருவர் அறிக்கையிட வேண்டும்; தொடர்ந்து கர்த்தரிடத்தில் ஜெபித்து மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஒருவரது பாவம் எந்த அளவுக்கு வெளிப்படையாகக் காணுகிறதோ அந்தளவுக்கு அறிக்கையிடுதலும் வெளிப்படையாய்க் காணப்பட வேண்டும்; அதற்கு அதிகமாகவோ, குறைவாகவோ அல்ல. தனது பாவங்களுக்காக மன்னிப்பைப் பெறுகிற எவருக்கும் கர்த்தருடைய ஆலோசனை இதுதான். அப்படியிராவிட்டால் அவர் விழுந்து போனவரே.

புதிய ஏற்பாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட உதாரணத்தைக் காணலாம். முதல் உதாரணம் மாய வித்தைக் காரனாகிய சீமோன். அவன் ஒரு மாய வித்தைக்காரனாக அல்லது குறி சொல்பவனாக இருந்து ஜனங்களை ஏமாற்றிக் கொண்டிருந்தான். பிலிப்பு சமாரியாவுக்கு ஊழியஞ் செய்ய வந்தபோது, அங்கே அநேகர் விசுவாசித்து சுவிசேஷத்துக்குக் கீழ்படிந்தனர். அவர்களில் சீமோனும் ஒருவன். இது குறித்த வசனங்களை வாசிப்போமாக: "அப்பொழுது சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று பிலிப்பைப் பற்றிக் கொண்டு அவனால் நடந்த அடையாளங்களையும், பெரிய

அற்புதங்களையும் கண்டு பிரமித்தான். சமாரியர்கள் தேவ வசனத்தை ஏற்றுக் கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர் கேள்விப்பட்டு பேதுருவையும், யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள். இவர்கள் வந்தபொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு, அவர்கள்களுக்காக ஜெபம் பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள். அப்போஸ்தலர்கள் கைகளை அவர்கள் மேல் வைத்ததினால், பரிசுத்த ஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்டபோது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டு வந்து, நான் எவன்மேல் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்றான். பேதுரு அவனை நோக்கி: தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடே கூட நாசமாய்ப் போகக் கடவது. உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒரு வேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக் கட்டியிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான். அதற்குச் சீமோன்: நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு எனக்காகக் கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றான்" (அப்போஸ்தலர் 8:13–46). நமக்குச் சொல்லப்பட்டிருப்பது என்ன? கிறிஸ்தவன் ஒருவன் அங்கே பாவஞ் செய்து விட்டதாகக் காண்கிறோம். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்பட்ட உபதேசம் என்ன? அவன் மனந்திரும்பி தேவனிடத்தில் வேண்டினால் ஒருவேளை அவனுடைய இருதயத்தின் எண்ணம் அவனுக்கு மன்னிக்கப்படலாம் என்று சொல்லப்பட்டது. அவன் அப்படிச் செய்தானா? ஆம், பேதுரு சொன்னபடி தனக்கு நேரிடாமலிருக்க தனக்காக வேண்டுதல் செய்யும்படி அவன் கேட்டான். இப்படியாக அவன் தன் குற்றத்தை அறிக்கையிட்டு பாவமன்னிப்பைக் கோரினான்.

லூக்கா 15–ம் அதிகாரத்தில் கெட்ட குமாரன் சம்பவத்தை

வாசிக்கிறோம். தன் தகப்பனோடிருந்த அவன் பிரிந்து போனான். இறுதியாக பாவம் அவனுக்குள் ஆழமாய் கிரியை செய்தபோது, அவன் தன்னிலை உணர்வடைந்து, திரும்பிப் போகத் தீர்மானித்தான். தான் பாவம் செய்து விட்டதாகவும் தனது தகப்பன் தன்னை மன்னிக்கும்படியும் வேண்டினான். அவன் தகப்பன் அவனை ஏற்றுக் கொண்டார். அவன் தேவனுடைய பிள்ளையானதால், விழுந்தபோது மனந்திரும்பி தன் பாவத்தை அறிக்கையிட்டான். பிறகு தனது தகப்பனிடத்திலே தன்னை மன்னிக்கும்படி வேண்டினான், இயல்பாக அவன் மன்னிக்கப்பட்டான்.

ஒரு கிறிஸ்தவன் பாவம் செய்யும்போது, அவன் விழுந்து போகிறான்; அல்லது சபை கூடி வருதலை விட்டு விடுகிறான்; எனவே அவன் தன் நிலையை இழக்கிறான். அவன் அதைத் தொடருவானானால் நித்திய வாழ்வை இழப்பான் அல்லது மனமாறுவானானால் தன் தவறுகளை அறிக்கையிட்டு, பாவமன்னிப்பிற்கென தேவனிடத்தில் ஜெபித்து, தொடர்ந்து கர்த்தருக்கென வாழ்வான். ஒருவன் கிறிஸ்தவனாக மாறிய பின் எப்படி வேண்டுமானாலும் (பழைய படியே) வாழ்ந்து பரலோகத்திற்கு போக இயலாது. ஜீவ கிரீடத்தைப் பெற திருமறை கூறுகிறபடி அவன் வாழ வேண்டும்.

# உபவாசமிருத்தல்
## Fasting

பக்தியுள்ளோர் மத்தியில் உலகம் முழுவதும் உபவாசம் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. தேவனுடைய ஜனங்கள் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளில் உபவாசமிருந்துள்ளதை யுகங்களினூடே காணப்படுவதால், உபவாசமிருத்தல் ஏதோ ஒரு புதிய காரியமல்ல. கர்த்தர் தமது மக்களை உபவாசமிருக்கும்படி கட்டளையிட்டுள்ளாரா என்பதே இன்றைய கேள்வி?

மேலே கொடுக்கப்பட்ட கேள்விக்கு பதில் காணு முன் உபவாசமிருப்பதை மிகைப்படுத்தாமல் இருக்கும் வரை உபவாசம் தவறல்ல என்பதை தெளிவாக அறிந்து கொள்ளக்கூடும். இன்னொரு புறம் பார்த்தால், உபவாசமிருப்பதாகக் கூறிக் கொள்ளும் பெரும்பாலானோர் உண்மையில் உபவாசமிருப்பதில்லை. உபவாசத்தலை அவர்கள் கேலிக்கூத்தாக்குகின்றனர். அவர்கள் வேடதாரிகள். பிற மனிதர்களின் சுய நலத்திற்காகவும், உபவாசமிருப்பவர்களின் சுய நலத்திற்காகவும் மாய்மாலம் பண்ணி உபவாசிக்கின்றனர். வித்தியாசமாய் தோற்றமளிக்கவோ, யாரையாகிலும் பழிவாங்கவோ தனது சுய விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளவோ யாரும் உபவாசித்ததாக திருமறை எங்கும் போதிப்பதில்லை. குறிப்பிட்ட மணிக்கணக்கில் மட்டும் உபவாசித்துவிட்டு மீதி நேரத்தை புசிக்கவும், குடிக்கவும் தக்க நேரமாக பயன்படுத்தவும் திருமறை ஒரு போதும் போதிக்கவில்லை. பகல் முழுவதும் உண்ணாமலும், குடியாமலுமிருந்து இரவெல்லாம் உண்ணுவது உபவாசம் பண்ணுவதற்கு அப்பாற்பட்டது. அது உபவாசத்தை பரியாசம் பண்ணுவதும், ஒருவர் தமது தேவைக்காக செயல்படுவதுமாகும்.

நாம் திருமறையை திருப்புவோமானால் பழைய ஏற்பாட்டில் அநேகரும் உபவாசமிருந்ததை அறிவதோடு மட்டுமல்ல, கிறிஸ்துவே உபவாசமிருப்பதை முன்னுதாரணமாகக் காண்கிறோம். ஒருமுறை அவர் நாற்பது நாட்கள் இரவும் பகலுமாய் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் உபவாசமிருந்தார் (மத்தேயு 4). அதேபோல தனது சீஷர்களையும் உபவாசிக்கும்படி போதித்தார், ஆகிலும் மாய்மாலக்காரர் போலல்ல என்றார். கிறிஸ்து, "நீங்கள் உபவாசிக்கும்போது மாயக்காரரைப்போல் முக வாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும் பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப் பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து

தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷருக்குக் காணப்படாமல், அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்", (மத்தேயு 6:16–18) என்று போதித்தார். ஆக, உபவாசமிருப்பதைக் கர்த்தர் கண்டனம் பண்ணவில்லை; சரியான நோக்கத்திற்காக இருக்க வேண்டும் என்பதையே சுட்டிக் காட்டினார். உண்மையென்னவெனில், சீஷர்கள் உபவாசமிருந்து ஜெபிப்பதையே அவர் எதிர்பார்த்தார், என்பதைக் காணலாம். அந்த நாட்களில் உபவாசமிருந்தவர்கள் மனிதர்கள் காண வேண்டும் என்பதற்காக பக்தியுள்ளவர்களைப் போல் மாய்மாலம் பண்ணினார்கள் என்பதையே அவர் கண்டனம் பண்ணினார். மனிதர்களுக்குத் தெரியாத வண்ணம் உபவாசிப்பதை கிறிஸ்து போதித்தார். இதினால், நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால், நமது உபவாசத்தைக்குறித்து தேவன் பிரியப்படுவார்.

புதிய ஏற்பாடு முழுவதிலும் கிறிஸ்தவர்கள் உபவாசம் இருக்க வேண்டும் என்பதை கட்டாயமாக எங்கும் குறிப்பிடப்படவில்லை. எந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியிலும் உபவாசம் இருக்க வேண்டும் என கட்டளையாகச் சொல்லப்படவில்லை. கர்த்தரைத் தொழுது கொள்ள உபவாசமிருக்க வேண்டும் என யாரும் கோரப்படவில்லை. ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனும் தன்தன் சுய விருப்பப்படி செயல்பட கிறிஸ்து விட்டுவிட்டார். உபவாசமிருக்க அவர்கள் விரும்பினால் இருந்துகொள்ளலாம். உபவாசமிருக்க வேண்டியது அவசியம் என அவர்கள் உணருவார்களானால், அது அவர்களது சிலாக்கியம்; ஆனால் அப்படியொரு கட்டளை கொடுக்கப்படவில்லை. ஆதலால் எந்த ஒரு கிறிஸ்தவனும் இன்னொரு கிறிஸ்தவன் மீது அதைத்திணிக்க இயலாது. அப்படிச் செய்பவன், தவறு செய்கிறான்.

'கர்த்தர்தாமே உபவாசமிருந்த' உதாரணத்தைக் காண்பது உண்மைதான். கிறிஸ்து உபவாசமிருந்ததற்காக ஒருவர் உபவாசமிருக்க வேண்டும் என்று யாராவது கட்டாயப்படுத்த முற்பட்டால், ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவைப் போலவே சிலுவையிலறையப்படுவதையும் கட்டாயமாக்க வேண்டும். நமது விசுவாசத்தைப் பலப்படுத்துவது நமது உபவாசத்தின் நோக்கமாயிராவிட்டால் பிறகு நமது உபவாசத்தினால் எந்த பலனுமில்லை.

ஆனால் ஏன் உபவாசிக்க வேண்டும்? தேவனிடத்தில் கிட்டிச் சேரவும், தாம் பலப்படவும், தேவனைக் குறித்து அதிகமாய் தியானித்து ஆவிக்குரிய சிந்தையில் ஈடுபடவும், சாத்தானை மேற்கொள்ளவும் கர்த்தர் உபவாசமிருந்ததாகக் காணலாம். அதேபோல சீஷர்களின் உபவாசத்தின் எண்ணமும் இந்த நோக்கங்களை கொண்டிருக்க வேண்டும் என்பதையே கர்த்தர் சுட்டிக் காட்டினார். தங்களுடைய பிரயோஜனத்தையேயன்றி, பிறருடைய பிரியத்திற்காக அவர்கள் உபவாசமிருக்கவேண்டியதில்லை.

இன்றைக்கு கிறிஸ்தவன் ஏன் உபவாசிக்க வேண்டும்? ஒருவர் தம் உலகப் பொருள் மற்றும் மாம்ச காரியங்களை விட்டு தமது மனதை ஆவிக்குரிய தன்மையில் நிறுத்தும்படி உபவாசிக்க வேண்டும்; கர்த்தரிடத்தில் கிட்டிச்சேரும்படி உபவாசிக்க வேண்டும்; சில பெலவீனங்களை மேற் கொள்ள உபவாசிக்க வேண்டும்; அதிகமாய் ஜெபிக்கக் கூடிய வாய்ப்புக்காக உபவாசிக்க வேண்டும்; கர்தருடைய பெலனைப் பெற்றுக்கொள்ள உபவாசிக்க வேண்டும்; சரியான பெலனைப் பெற்றுக் கொள்ள உபவாசிக்க வேண்டும்; சரியான தீர்மானம் எடுக்க உபவாசிக்க வேண்டும்; மேலும் பரிசுத்தப்பட உபவாசிக்க வேண்டும். உபவாசமிருக்க வேண்டியதன் நோக்கங்களில் இவைகள் சில.

இன்றைய கிறிஸ்தவர்கள் மத்தியில் அல்லது தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்வோர் மத்தியில் மிகக் குறைவாகவே உபவாசிக்கப்படுகிறது. இது தவறு என்பதில் சந்தேகமில்லை. உபவாசம் கட்டளையிடப்படாத ஒன்று என்ற போதிலும், அதற்கு இடமேயில்லை என்று பொருளல்ல. மற்றவர்களின் வலையில் வீழ்ந்து, மிகைப்படுத்தலாக உபவாசம் அமைந்து விடாதபடி, உபவாசமே நமக்கு நன்மைக்குப்பதிலாய் கண்டனத்திற்குரியதாய் மாறிவிடாதபடி இருக்கவேண்டும். மனுஷர்கள் அல்ல, தேவன் காணும்படிக்கு எங்குமுள்ள கிறிஸ்தவர்கள் அனைவரும் நன்கு உபவாசமிருத்தல் வேண்டும். உலகத்தைப் பொறுத்த மட்டில் அது காணப்படவேண்டிய அவசியமில்லை; தேவன் அதை அறிந்து உபவாசிப்போரை ஆசிர்வதிக்க வேண்டும்.

ஏதோ பழக்கதோஷத்தினாலோ, எடையைக் குறைக்க எண்ணியோ, சுயமகிமைக்கென்றோ உபவாசமிருப்பது வீணானது. கர்த்தரிடத்தில் கிட்டிச் சேர்தல் மட்டுமே நோக்கமாகக் கொண்டு உபவாசிப்பது பயன்தரும். இவைகளைச் சிந்தியுங்கள்.

# திருமணம்
## Marriage

மனிதனைப் போலவே திருமணமும் பழமையானது. ஆரம்ப காலத்திலேயே தேவன், இந்த பரிசுத்த உறவை எப்பொழுதும் ஆளுகை செய்யும்படியான சில கட்டளைகளை கொடுத்துள்ளார். "பின்பு தேவனாகிய கர்த்தர்; மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். தேவனாகிய கர்த்தர் வெளியின் சைகலவித மிருகங்களையும், ஆகாயத்துன் சகல விதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார்; அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று. அப்படியே ஆதாம் சகலவித நாட்டு மிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவிதக் காட்டுமிருகங்களுக்கும் பேரிட்டான்; ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார்" (ஆதி.2:18–21).

கிறிஸ்துவின் நாட்களில் உள்ள உரையாடல் இப்படியாக இருக்கிறது. "அப்பொழுது பரிசேயர் அவரைச் சோதிக்கவேண்டுமென்று அவரிடத்தில் வந்து: புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார். அதற்கு அவர்கள் அப்படியானால், தள்ளுதற்சீட்டைக் கொடுத்து, அவனைத் தள்ளிவிடலாமென்று மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை. ஆதலால், எவனாகிலும் தன் மனைவி

வேசித்தனஞ்செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணினால், அவன் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்; தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்கிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். " (மத். 19:3–9)

மறுபடியும் கிறிஸ்து கூறுகையில் "தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும் தள்ளுதற்சீட்டை அவளுக்குக் கொடுக்கக்கடவன் என்று உரைக்கப்பட்டது. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ்செய்யப்பண்கிறவனாயிருப்பான்; அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்" (மத்.5:31–32) என்றார்.

மேலே நாம் பார்த்த வசனங்களில் இருந்து இந்த உண்மைகளை நாம் காண முடிகின்றது:

1. திருமணத்தை தேவன் பிரதிஷ்டை செய்தார்.

2. மனிதன் தனிமையில் இருப்பது நல்லது இல்லை என்றும், அவனுக்கு ஒரு துணை தேவை என்றும் அவர் கண்டார்.

3. ஒரு மனிதன் தன் தகப்பனையும், தாயையும் விட்டுவிட்டு தன் மனைவியுடன் சேர்ந்திருக்க வேண்டும்.

4. திருமணத்திலே மனிதனும் மனுஷியும் ஒரே மாம்சமாகிறார்கள்.

5. ஒவ்வொரு திருமண உறவிலும் 'ஒரு மனிதனும், ஒரு மனுஷியும் தான் இருக்க வேண்டும்' என ஆரம்பத்தில் இருந்ததே தேவன் விரும்பியதாக கிறிஸ்து போதித்தார்.

6. மேலும் கிறிஸ்து போதிக்கையில், தேவன் இணைத்த எதற்குமே மனிதன் தடையோ,பிரிவினையோ உண்டாக்கக் கூடாது என்றார்.

7. ஒரு காலத்தில் ஜனங்களுடைய கடின நடவடிக்கையின் நிமித்தம் தேவன் விவாகரத்தை அமைத்திருப்பினும், ஆரம்பம் முதல் அவர் அப்படி ஒன்றை விரும்பவில்லை.

8. விவாகரத்து மற்றும் மறுமணம் செய்வதற்கு, கிறிஸ்து ஒரே ஒரு விதிவிலக்காக விபசாரத்தை மட்டும் குறிப்பிடுகிறார்.

**9.** விபச்சாரம் இல்லாதக் இடத்தில், ஒருவர் விவாகரத்தை செய்து, மறுமணம் செய்து கொண்டால் அப்படி செய்பவர்கள் விபச்சாரம் செய்தாயிற்று.

வேத வசனத்தின்படி, ஒருவர் தன் வாழ்வு முழுவதற்குமாக ஒரே முறை திருமணம் செய்கின்றார். தன் மனைவியை, ஏதே ஒரு காரணத்திற்காக விலக்கி வைப்பதோ, தனக்கென்று ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவிகளை சேர்த்துக்கொள்வதோ யாருக்கும் அனுமதியில்லை.

ஆனாலும், தன் வாழ்க்கை துணை விபச்சாரம் செய்தாயிற்று என்று ஒருவர் கண்டால், அப்பொழுது அவர் மறுமணம் செய்யத் தகுதியுடையவராகிறார். ஆனால் இதைத் தவிர வசனத்தின்படி மறுமணம் அனுமதிக்கப்படவில்லை.

ஒரு தனிநபர், ஒன்றிற்கும் மேற்பட்ட வாழ்க்கைத் துணையுடன் வாழ்ந்தாலோ, அல்லது ஒருவர் விபச்சார வாழ்வு வாழ்ந்தாலோ, அவர் கிறிஸ்தவராக விரும்பினால் முதலாவது தன்னுடைய முதல் மனைவியைத் தவிர மற்ற எல்லா மனைவிகளையும் விட்டுவிட வேண்டும்; மேலும் விபச்சார வாழ்வு வாழ்பவர் கிறிஸ்தவராக விரும்பினால் தன் விபச்சார வாழ்வை விட்டுவிட வேண்டும்.

ஏனெனில் , திருமணம் என்பது ஒரு தெய்வீக ஏற்பாடு; மேலும் அதன் நோக்கம், ஒரு தனிநபருக்கு இவ்வுலகில் வாழ துணையை கொடுப்பதற்காகவே. திருமணம், விவாகரத்து மற்றும் மறுமணத்திற்காக தேவனுடைய சட்டங்கள் உண்டு என்பது மட்டுமல்ல, வசனத்தில் கணவன், மனைவி மற்றும் பிள்ளைகட்கான அறிவுரைகளும் உண்டு என்பது மட்டுமல்ல, வசனத்தில் கணவன், மனைவியையும் மனைவி கணவனையும் நேசிக்கவேண்டும்; பெற்றார் பிள்ளைகளை சரியாக பயிற்சிக் கொடுத்து வளர்க்கவேண்டும். வாசியுங்கள்(எபே. 6:1–4; 5:22–25; கொலோ 3:18–21.)

அதனால், திருமணமானது எல்லாருக்கும் கணமுள்ளதாயிருக்கட்டும். அதைக் குறித்து தேவன் கொடுத்த கட்டளைகளை நீங்கள் மதித்து நடந்தால், வெகுவாக ஆசீர்வதிக்கப்படுவீர். இல்லையெனில், உங்களுக்கு பிரச்சனையே மிஞ்சும்; மேலும் இவ்வுலகிலும், வரப்போகும் உலகிலும் வசனத்திற்கு விரோதமான திருமணவாழ்விற்காக கணக்கு கொடுக்க வேண்டும்.

# மதசம்பந்தமான விடுமுறைகள் (பண்டிகைகள்)
## Religious Holidays

எல்லா மதங்களிலும் விருந்துக்கும் மகிழ்ச்சிக்கும் காரணமான விடுமுறைகள் உண்டு. இப்படிப்பட்ட நாட்களை ஒவ்வொரு வருடமும் அனுசரிக்கின்றனர்; மேலும் அவைகளினால் மிகுந்த குதூகலம் உண்டு. இது "கிறிஸ்தவம் என்று தங்களை நினைத்துக் கொள்ளும் பிரிவினரிடமும் விதிவிலக்கல்ல." "கிறிஸ்தவம் என்று நினைக்கும்" என்று நான் ஏன் கூறுகிறேன் என்றால், உண்மையான கிறிஸ்தவ மார்க்கத்தில் மத பண்டிகையோ, விடுமுறையோ கிடையாது.

வேதாகமம் தெளிவாக அவற்றை கண்டிக்கின்றது. கலாத்தியர்களை இதைக் குறித்து பவுல் கண்டிக்கையில், " ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம். என் கையெழுத்தாய் எவ்வளவு எழுதினேனென்று பாருங்கள் " (கலா. 4:10–11). சந்தேகமே இல்லை, தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொண்டு இப்படிப்பட்ட காரியங்களை செய்பவர்களிடமும், பவுல் இன்று இருப்பாரேயானால் இதையே கூறுவார் ஏன்? ஏனென்றால் புத்தியில்லாத கலாத்தியரைப் போலவே இவர்களும் நாட்களையும், மாதங்களையும், நேரங்களையும், வருடங்களையும் அனுசரிப்பதால்தான்.

இப்படிப்பட்ட ஒரு மத விடுமுறை, இன்று மத உலகத்தில் அநேகரால் அனுசரிக்கப்படுவது கிறிஸ்துவின் பிறப்பு என்று அழைக்கப்படும் கிறிஸ்துமஸ் பண்டிகையாகும். உண்மை என்னவெனில், வேதாமத்தில் எங்குமே கிறிஸ்துவின் பிறந்த நாளை நாம் அனுசரிக்க வேண்டும் என போதிக்கவில்லை; மேலும் அவருடைய பிறந்த தேதி எது என குறிப்பிடப்படக் கூட இல்லை. அது டிசம்பர் 25 அல்லது வேறு எந்த குறிப்பிட்ட நாளோ என்று வேதாகமத்தில் (பைபிள்) எங்குமே கூறப்படவில்லை. முக்கியமான காரியம் என்னவெனில், கிறிஸ்து பிறந்தார் என்பது உண்மை; எனினும் அவருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்ந்தெழுதலினாலேயே நமக்கு பாவ மன்னிப்பும், நித்திய வாழ்வும் இருப்பதால் அவருடைய பிறப்பையல்ல மரணத்தையே நாம் நினைவு கூற வேண்டும். நாம் எதையாவது நினைவு கூற வேண்டுமெனில் அது இயேசுவின் மரணத்தையே! மேலும் அதுவும் வருடத்திற்கு ஒரு முறை

அல்ல, மாறாக கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவதின் மூலம் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் அப்படி செய்ய வேண்டும். (மத். 26:26–28; அப். 20:7) சரி, கிறிஸ்துமஸ் பண்டிகையை யார் ஆரம்பித்தது? கத்தோலிக்க சபையாகும். அதற்கு அவர்கள் கூறின காரணம் என்னவெனில், நிறைய பரிசுத்தவான்களை நினைவுகூற 'மாஸ்' உண்டு; ஆனால், கிறிஸ்துவிற்கு அப்படி எதுவும் இல்லையே என்றனர். ஆதலால் கிறிஸ்து–மாஸ் என்று சொல்லக்கூடியதை அவர்கள் ஆரம்பித்தனர். அது மட்டுமல்ல, இந்த இவர்களின் முயற்சியும் கூட பாகாலின் பண்டிகையை சார்ந்ததே. இவர்கள்,'சால்' என்னும் சூரிய கடவுளுக்கு செய்யப்படும் மரியாதை நிமித்தமாகி விருந்தாகிய பாகாலின் பண்டிகையை கிறிஸ்மஸ் என்று மாற்றினர். பின்பு காலம் சென்றபோது இது ஒரு பாரம்பரிய செயலாக, ஜனங்கள் இதை வசனத்தின்படியான பண்டிகையாக மாற்றினர். இந்த கிறிஸ்மஸ் பண்டிகைக்கும் பைபிளுக்கும் ரொம்ப தூரம். நிச்சயமாக, பைபிளைப் படித்த ஒவ்வொருவரும் தெளிவாக அறியக்கூடியது என்னவெனில், சாண்ட கிளாஸ் வேடம் (கிறிஸ்மஸ் தாத்தா), கிறிஸ்மஸ் மரம் (கிறிஸ்மஸ் ட்ரீ), விலையுயர்ந்த பரிசுப் பொருட்கள் மற்றும் பல காரியங்கள் ஆகிய எதுவுமே வசனத்தின்படியானது இல்லை என்று அறிய முடியும். மேலும் உண்மையான கிறிஸ்தவர்கள் யாருமே இந்த மத விடுமுறையை , பண்டிகையை அனுசரிக்கமாட்டார்கள். அப்படிபட்டவர்கள் இதை ஏதோ பூமிக்குரிய கொண்டாட்டம் என்று விட்டுவிடுவர்.

இன்று கிறிஸ்தவ உலகம் என்று கூறப்படும் அநேகரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றொரு மத விடுமுறையானது "ஈஸ்டர்"ஆகும். இப்பண்டிகை கிறிஸ்து மரித்த நாளையும், ஈஸ்டர் பண்டிகையை முக்கிய சம்பவமாக கருதப்படும் கிறிஸ்துவின் கல்லறையில் இருந்து உயிர்தெழுந்த சம்பவத்தையும் கொண்டாடுவதாகும். இப்படியாக இதில், கிறிஸ்து மரித்த நாளாக "புனிதவெள்ளியும்", பின்பு அவர் உயிர்தெழுந்த நாளாக "ஈஸ்டர் ஞாயிறையும்"அனுசரிக்கின்றனர். மேலும் இந்த ஈஸ்டர் பண்டிக்கைக்கு முன்னதாக 'லெந்து காலம்' என்று ஒரு காலத்தை அனுசரித்து, அதில் அநேகர் உபவாசம் இருப்பதும், சில உணவு வகைகளை தவிர்ப்பதும் வழக்கம். இது ஈஸ்டர் ஞாயிறு வரை இவ்வாறு செய்யப்படும். இப்பண்டிகையின் போது அநேகர் புத்தாடை அணிந்து விருந்து உண்டு, ஈஸ்டர் கேக் வெட்டி கொண்டாடுவர். ஆனால் இந்த முழு காரியமும் தவறானது. உண்மையிலேயே இந்த ஈஸ்டர் பண்டிகையும் கூட "வசந்தகால தேவதையை"வாழ்த்தும்படி அனுசரிக்கப்பட்ட ஒரு பாகாலின் பண்டிகையின் மறுஉருவம் (மாற்றம்) தான்

என்பது உங்களுக்கு தெரியுமா? கத்தோலிக்க சபையானது இப்படிப்பட்ட ஒரு பாகாலின் பண்டிகையை எடுத்து அதை ஈஸ்டராக மாற்றியது. சரி, உண்மையான வேதாகமத்து கிறிஸ்தவர்கள் வருடம் முழுவதும் ஒவ்வொரு வாரமும் இந்த ஆண்வரின் உயிர்தெழுதலை நினைவுகூர்ந்து அனுசரிக்கும் போது, ஏன் வருடத்திற்கு ஒரே ஒரு நாளில்இதை கொண்டாடுவானேன்?(அப். 20:7; 1கொரி.11)ஆகையால், ஈஸ்டர் அனுசரிப்பது வேத வசனத்திற்கு புறம்பானது; மேலும் கிறிஸ்தவர்களுக்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.

வருடம் முழுவதும், மேலும் பல மத சம்பந்தமான குறைவான முக்கியத்துவம் விடுமுறை நாட்கள் உண்டு; ஆனால் நிச்சயமாக, வேதத்தின் போதனைக்கு அவை முரண்பாடானவை. கிறிஸ்தவர்கள் இப்படி நாட்களையும், மாதங்களையும், வருடங்களையும் அனுசரிப்பதில் உள்ள அபாயத்தை ஆண்டவர் அறிந்திருந்தபடியினால் தான், அவர் அவைகளை அனுமதிக்காதது மட்டுமின்றி, அப்படி செய்வதை கண்டித்தும் உள்ளார். ஆனால் என்ன நடந்தாலும் பரவாயில்லை என்று மனிதன் தன் முடிவில் உறுதியாயிருந்து இவைகளை அனுசரிப்பது வேடிக்கையானது. மேலும் எப்பொழுதுமே மனிதன் தன்னுடைய செயல்களை நியாயப்படுத்துவான்; மேலும் இப்படிப்பட்ட மத பண்டிகைகளை அனுசரிப்பது வேதத்தை சார்ந்ததே, கிறிஸ்தவத்தை வளர்க்கவே என்று அவன் சாக்குபோக்கு கூறுவான். ஆனாலும், அநேகர் இப்பண்டிகையை அனுசரிப்பதற்கு காரணம், அவர்கள் கூட்டத்தோடு கூட்டமாக செய்வதால் தான், இப்படிப்பட்டவர்களின் எண்ணம் என்னவெனில், மற்ற எல்லாருமே இதை செய்கிறார்கள்; அதனால் இது சரியாகத்தான் இருக்கும் என்பதே!

ஆகையால் இப்படிப்பட்ட பண்டிகை நாட்களைப் பற்றி வேதாகமம் என்ன கூறுகின்றது என்பதை ஒவ்வொருவரும் தங்கள் பைபிளைப் படித்து அறிய வேண்டும். இப்படிப்பட்ட நாட்களை தேவனுடைய வார்த்தை அங்கீகரித்தால், சரி என்று ஏற்றுக்கொள்வோம்; இல்லையெனில் மனுயோசனை செய்யாமல் அப்படியே விட்டுவிட்டு, அறியாதவர்களை எச்சரிக்க வேண்டும். ஏனெனில் நாம், பழக்கங்கள், பாரம்பரிய செயல்கள் மற்றும் மனிதனுடைய சுய போதனைகளை விட்டுவிலகி வேதாகமம் என்ன சொல்லுகின்றதே அதற்கு திரும்ப வேண்டும். வசனம் எதை சொல்லுகிறதோ அதை மட்டுமே செய்யும்போதுதான் நாம் நம்முடைய செயல்களின் உறுதியாயிருக்க முடியும். உண்மையிலேயே, இப்படிப்பட்ட பண்டிகைகளை அனுசரிப்பது என்பது

சந்தோஷத்தை கொடுக்கும் என்பது உண்மைதான்! ஆனால், இப்படி செய்வதினால் நாம் யாரை திருப்திப்படுத்த முயல்கிறோம்? நம்மையா, மனிதனையா அல்லது தேவனையா?

குறித்துக் கொள்ளுங்கள்! உண்மையான கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட மதப்பண்டிகைகளில் கலந்து கொள்ளமாட்டார்கள். ஒருவர் தன்னை கிறிஸ்தவர் என்று சொல்லிக்கொண்டு இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டால், அது அவர் கிறிஸ்தவரே இல்லை என்பதை தெரிவிக்கிறது. முரண்பாடாகவோ, வித்தியாசமாகவோ இருக்க வேண்டும் என்பதற்காக உண்மை கிறிஸ்தவர்கள் இதை தவிர்க்கிறார்கள் என எண்ண வேண்டாம்; மாறாக, வசனத்திற்கு விரோதமான பண்டிகைகளின் நாம் ஈடுபடுவதை ஆண்டவர் தடைசெய்கிறார்.

# மதப் பட்டங்கள்
## Religious Titles

மனிதன் ஒரு பட்டப் பிரியன். தொடர்ச்சியாகவே, தன் பெயரின் இறுதியில் ஒட்டவைத்துக் கொள்ளும்படி புதிய பட்டங்களை அவன் தேடிக் கொண்டே இருக்கிறான். ஒருவேளை இவை மதம்சாராமல் இருக்கும் பட்சத்தில், இப்படிப்பட்ட தேடல் தவறில்லாமல் இருக்கலாம்; ஆனால் இப்படிப்பட்ட பட்டங்கள் மதம் சார்ந்த முக்கியத்துவம் பெறும்பொழுது, நிச்சயமாகவே அவை வேதத்திற்கு புறம்பானவை.

இன்றைய மதஉலகில், பெரும்பாலான மதப்பெயர்கள் எல்லாமே வேதம் சாராதவை. அவைகள் ஏன் வேதத்திற்கு (பைபிள்) புறம்பானவை எனில், திருமறை எங்குமே அவைகளை ஏற்கவோ, நியாயப்படுத்தவோ இல்லை. ஒருவருக்கு கொடுக்க தகுதியிராத அல்லது கொடுக்கக் கூடாத, வெறும் ஒரு மனிதனை உயர்த்தவும், அவனுக்கு ஒரு பதவி கொடுக்கவும் பெருமைப்பட செய்யவுமே கொடுக்கப்படும் இப்படிப்பட்ட பெயர்களை பைபிள் கண்டிக்கிறது என்பதை உங்களுக்கு காண்பிக்க உள்ளோம்.

'போப்' என்ற பெயரோ, பட்டமோ வேதாகமத்திற்கு புறம்பானது; ஏனெனில், பைபிளில் எங்குமே இப்படிப்பட்ட பட்டத்துடன் ஒருவர் இருந்ததாக இல்லை. சபையின் தலைவராக உலகில் எந்த மனிதனும் பதவி அல்லது நிலையைப் பெற முடியாது. மேலும் இப்படி சொல்லிக் கொள்ளும் ஒரு மனிதனின் முன் தலை வணங்குபவர்கள், வேதாகமம் கூறாத ஒரு பதவியை அங்கீகரித்து தவறு செய்கிறார்கள். பைபிள் (திருமறை) தெளிவாக கூறுவது என்னவெனில், கிறிஸ்துவே சபைக்கு தலைவர், எந்த மனிதனும் அல்ல (கொலே. 1:18; எபே. 1:22,23).

கார்டினல், பிஷப் மற்றும் ஆர்ச்–பிஷப் போன்ற பெயர்களும், பதவிகளும் வசனத்திற்கு விரோதமானவை. கத்தோலிக்க சபை போன்ற எந்த ஒரு நிறுவனத்திற்கும் பைபிளில் ஆதாரமில்லை. வசனத்தை வாசிக்கும்போது கிறிஸ்துவே சபைக்கு தலைவர் என்றும், மேலும் ஒவ்வொரு சபையிலும் ஒன்றிற்கும் மேற்பட்ட மூப்பர்களும், உதவிக்காரர்களும் இருந்தனர் என்றும்,

ஏதோ ஒரு கூட்ட ஆண் மக்கள் முழு சபையையோ, பல சபைகளையோ ஆளுவது அல்ல. "நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தா தீவிலே விட்டுவந்தேனே." (தீத்து 1:5) என்று பவுல் தீத்துவை உற்சாகப்படுத்துகிறார். மேலும், ஒருவர் மூப்பராக அல்லது கண்காணியாக இருப்பதற்கு என்ன தகுதி வேண்டும் என்பதையும் அவர் கூறுகிறார்; அதில் ஒரு தகுதியானது, அந்த தனிநபர் திருமணம் செய்தவராகவும் விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவராகவும் இருக்க வேண்டும். இவைகளையே பவுல் தீமோத்தேயுவுக்கு 1 தீமோ. 3ம் அதிகாரத்திலும் எழுதுகிறார். இது கத்தோலிக்க சபை மற்றும் வேறு பல மத நிறுவனங்களுக்கு ஒரு சம்மட்டி அடியைப் போல்கூறுகிறது.

ஆண்டவர் புறக்கணிக்கும் மற்றொரு பட்டம் என்னவெனில், ஒரு மனிதனை 'ஃபாதர்' (Father) என அழைப்பதாகும். "பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்." (மத். 23:9) என்று கிறிஸ்து எச்சரித்தார். உலகப்பிரகாரமான தகப்பனை அப்பா அல்லது ஃபாதர் (Father) என அழைப்பது தவறில்லை; ஆனால் மதரீதியாக மனிதனை ஃபாதர் (Father) என அழைப்பது ஆண்டவருக்கு நேரடியாக கீழ்ப்படியாமையாகும். நாம் மனிதனுக்கா? அல்லது தேவனுக்கா? யாருக்கு கீழ்ப்படிந்து சேவை செய்வோம்?

மேலே சொல்லப்பட்ட கட்டளையைப் போலவே, மனிதர்கள் 'ரபீ' என்று பட்டத்தை வைத்துக்கொள்வதையும் கிறிஸ்து கடிந்து கொண்டார்; ஏனெனில் அவர், "நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக் கிறீர்கள்." (மத். 23:8) என்று விளக்குகிறார். இதேபோலதான் "எஜமான்" (Master) என்று அழைக்கப்படுவது பற்றியும் அவர் கூறுகிறார். "நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்." (மத். 23:10) சிலர், இன்றும் தங்களை ரபீ என்றும் எஜமான் என்றும் மத ரீதியானவைகளில் அழைக்கின்றனர். அவர்கள்

கிறிஸ்துவின் வார்த்தையின்படி தவறு செய்கின்றனர்.

இன்னும் ஆயிரக்கணக்கானோர் தங்களை, "ரெவரென்ட்" (Reverend), "ரைட் ரெவரென்ட்" (Right Reverend), "மோஸ்ட் ரைட் ரெவரென்ட்" (the Most Right Reverend) மற்றும் "டாக்டர்" (Doctor) போன்ற பட்டங்களை மத வட்டாரங்களில் வைத்துக் கொள்கின்றனர். ஆனால், "அவர் தமது ஜனத்திற்கு மீட்பை அனுப்பி, தமது உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாகக் கட்டளையிட்டார்; அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது." (சங். 111:9) என்று கூறுகிறது. இப்பொழுது ஒரு கேள்வி: தேவனுக்கு ஒப்பாக அல்லது இணையாக இருக்க நம்மில் யார் உரிமை கோருவோம்? ஆனால் இங்கே, மேற்சொல்லப்பட்டபடி "ரெவரன்ட்" (Reverend) போன்ற பட்டங்களை வைத்துக்கொள்ள விரும்புகிறவர்கள், தங்கள் உடன் உள்ள மனிதர்கள் தங்களை அப்படியே பார்க்க வேண்டும் என விரும்புகிறார்கள். இது தேவனை திருப்திப்படுத்துமா?

இப்படிப்பட்ட மனிதன் உண்டாக்கின பெயர்களும், பட்டங்களும், மற்ற பயன்பாட்டில் உள்ள அனைத்தும் கூட 'வசனத்திற்கு புறம்பானவை.' ஏனெனில் திருமறை (பைபிள்) அவைகளை எந்த விதத்திலும் போதிக்கவோ, அங்கீகரிக்கவோ இல்லை. இதற்கு ஒரு காரணம் என்னவெனில், இவை அனைத்தும் மனிதனை உயர்த்தி, அவனை ஆராதிக்கப்படும் அல்லது உயரமான நிலைக்கு கொண்டு போகிறது. ஆனால், மனிதன் மனிதனை ஆராதிக்கக் கூடாது. எல்லா மனிதர்களுமே பாவம் செய்து, இரட்சிப்புத் தேவையான நிலையில் உள்ளோம் (ரோ. 3:23; ரோ. 5:8). ஒருவர், தன்னை மற்றவர்கள் சேவிக்கும்படி விரும்பாமல், தான் சேவிக்கிறவராய் இருக்க வேண்டும். தன்னை வணங்கும்படி பேதுரு கொர்நேலியுவை அனுமதியாமல், "பேதுரு உள்ளே பிரவேசிக்கிற பொழுது, கொர்நேலியு அவனுக்கு எதிர்கொண்டுபோய், அவன் பாதத்தில் விழுந்து, பணிந்துகொண்டான். பேதுரு அவனைத் தூக்கியெடுத்து: எழுந்திரும், நானும் ஒரு மனுஷன்தான் என்றான்." (அப். 10:25,26) என்று விளக்கினார். பாருங்கள்! பேதுருவே இப்படி சொல்வாரேயானால், இன்றைய பிரசங்கியார் அனைவரும் எப்படிப்பட்ட எண்ணம் உடையவர்களாய் இருக்க வேண்டும்.

இன்றைய மத உலகில் உள்ள ஒரு முக்கியமான பிரச்சனை என்னவெனில், அநேக மனிதர்கள் தங்களை மற்றவர்களைவிட மேலாக உயர்த்திக் கொள்ள விரும்பி, தங்களை சேவிக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய எண்ணம் என்னவெனில், இப்படிப்பட்ட பட்டங்களை அவர்கள் தங்களுக்குத் தாங்களே கொடுத்துக் கொள்வதினால் அவர்கள் சொல்லும் எல்லாவற்றையும், மற்றவர்கள், சட்டம் போலவும் கேள்வி ஏதும் கேட்காமலும் பின்பற்ற வேண்டும் என விரும்புகின்றனர்.

பாருங்கள்! இவர்கள் எவ்வளவு தவறாயிருக்கின்றனர். இந்த உலகில் மற்றுமொரு பிரச்சனை என்னவெனில் ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்கு முன் தலைகுனிந்து வணங்குகிற அவலம்; இது அவர்களிடம் உள்ள பட்டங்களை மட்டும் பொருத்ததல்ல. இப்படிப்பட்டவர்கள், தாங்கள் தங்களுடைய வேதாகமத்தை தாங்களே வாசிக்க முடியும் என்றும், தனக்கென்று ஒரு சுயமான புத்தியிருக்கிறது என்றும், மேலும் தேவன் தன்னை எந்த மனிதனுக்கும் முன் தலைகுனிந்து வணங்க விரும்பாமல் ஆண்டவர் ஒருவருக்கு முன் மட்டுமே பணிய விரும்புகிறார் என்பதையும் உணர வேண்டும்.

அதனால் போப், கார்டினல், பிஷப், பாஸ்டர், ஃபாதர், ரெவரெண்ட், ரபீ, எஜமான் போன்ற பட்டங்களை தரித்துக் கொள்ளும் மனிதர்கள் ஆண்டவரை பின்பற்றவில்லை என்பதை நன்றாக மனதில் வைத்துக் கொள்ளுங்கள்!

ஒரு வேளை இப்படிப்பட்டவர்கள், தாங்கள் ஆண்டவரை தான் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொண்டாலும், இப்படிப்பட்ட தடை செய்யப்பட்ட பட்டங்களை பயன்படுத்தி தன்னையே ஆண்டவராக உயர்த்திக் கொள்கிறார்கள். நீங்கள் எந்த ஆண்டவரை ஆராதித்து, மரியாதை கொடுக்க விரும்புகிறீர்கள்? இந்த வானத்தையும் பூமியையும் படைத்த ஆண்டவரையா அல்லது படைத்தவருக்கு மட்டுமே உரிய மகிமையையும் பெயரையும் திருடிய ஏதோ ஒரு மனிதனையா?

திறவுகோல் 29

# தவறான உபதேசங்கள்
## False Doctrines

மதத்தின் பெயரால் கற்றுக் கொடுக்கப்படும் அனைத்துமே உண்மை கிடையாது. அதேப்போல், தன்னை தேவனுடையவர் என்று கூறிக்கொள்ளும் எல்லாருமே பிரசங்கியார் அல்லது போதகர் அல்லது தேவனுடையவர்கள் அல்ல. ஒரு காரியம் உண்மையா, இல்லையா என தேவனுடைய வார்த்தையாகிய பைபிள் சொல்வதுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தான் ஒருவர் தெரிந்துகொள்ள முடியும். மேலும், ஒருவர் தேவனுடையவர் தான் என, அவரை ஆண்டவருடைய வார்த்தையுடன் ஒப்பிட்டுப் பார்த்தே நீங்கள் அறிய முடியும். "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்." (1யோ. 4:1).

ஆகையால், இங்கு நாம் சில தவறான போதனைகளை சுருக்கமாக பார்க்கலாம். யாரோ ஒருவர் அதை நம்ப மறுப்பதினால் அது தவறானது அல்ல, மாறாக, அவை வசனத்திற்கு விரோதமானது என பைபிள் கூறுவதினால் அது தவறானது ஆகும்.

ஆனால் இங்கு நீங்களே பாருங்கள்:

**1. தேவன் சிலரை இரட்சிக்கப்பட்ட நிலைமைக்கு என்றும், சிலரை இரட்சிக்கப்படாத நிலைமைக்கு என்றும் முன்குறித்து உள்ளார் என்பதும், அதை மாற்ற ஒரு தனிநபர் ஒன்றும் செய்ய இயலாது என்பதும் ஒரு தவறான போதனையாகும்.** இது தவறான போதனை, ஏனெனில், தேவன் நீதிமானை இரட்சிக்கவும் தீமையானவர்களை தண்டிக்கவும் முன்குறித்துள்ளார்; மேலும் இதில் எந்தப் பிரிவில் ஒருவர் சேர வேண்டும் என்பதை அவரே தீர்மானிக்க வேண்டும். இந்த தவறான போதனை உண்மையில்லையெனில் வேதாகமம் வீணானதும், அதை வாசிப்பது நேரத்தை வீணடிப்பதும் ஆகும். "தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளிய தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்

படியே, நம்மை இயேசு கிறிஸ்துமூலமாய்த் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்" (எபே. 1:4–6) என்று பவுல் கூறுகிறார். இப்படியாக, நீதிமான்கள் இரட்சிப்பிற்காக முன்குறிக்கப்பட்டுள்ளனர் என பவுல் கூறுகிறார்; ஆனால் எந்த குழுவைச் சார்ந்தவர்கள் நீதிமான்களாயிருப்பார்கள் என முன் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பவுல் கூறவில்லை. அதை தீர்மானிக்கும்படியானது ஒவ்வொரு மனிதரைப் பொறுத்தது.

**2. ஒரு குழந்தை பாவத்துடன் பிறக்கிறது என்பது ஒரு தவறான போதனை ஆகும்.** இதை நிரூபிப்பதற்காக அநேகர் தாவீதின் இக்கூற்றை பயன்படுத்துகின்றனர், "இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்." (சங். 51:5) ஆனாலும் இங்கே பார்த்தீர்களானால், அவர் பாவத்தில் பிறந்ததாக தாவீது கூறுகிறாரே ஒழிய, பாவத்துடன் தான் பிறந்ததாக கூறவில்லை. இதற்கு பெரிய வித்தியாசம் உண்டு. நிச்சயமாக, நாம் பிறக்கின்ற இந்த உலகம் பாவத்தினால் நிறைந்துள்ளது. மேலும் எல்லா பொறுப்புள்ள வயதுடையவர்களும் பாவம் செய்திருப்பதினால், 'நான் துர்குணத்தில் உருவானேன்' என்பது உண்மையாயிருக்கிறது. இப்படிப்பட்ட 'மனுஷன் பாவத்துடன் தான் பிறக்கிறான்' என்று உபதேசம் எவ்வளவு போலியானது என்பதை உங்களுக்கு விளக்க, கிறிஸ்து சிறு பிள்ளைகளிடம் ஒரு பாடத்தை போதிக்கும் நிகழ்ச்சி நமக்குண்டு. தன்னுடைய சீஷர்கள், 'ராஜ்யத்தில் யார் பெரியவனாயிருப்பான்?', என்று தன்னிடம் கேட்டதற்கு அவர் பதில் கூறுகையில், "அவ்வேளையிலே சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து: பரலோகராஜ்யத்தில் எவன் பெரியவனாயிருப்பான் என்று கேட்டார்கள். இயேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி: நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோகராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்" (மத். 18:1–4) என்று கூறினார். பாருங்கள்! இப்பொழுது, குழந்தைகள் பாவத்துடன் பிறக்கின்றது என்றால், ஆண்டவர் தன்னுடைய சீஷர்களிடம், அவர்களைப்போல மாறவேண்டும் என கூறியிருக்க மாட்டார்; ஆனால், ஒரு குழந்தையானது, தான் கணக்கொப்புவிக்கத்தக்க வயதை அடையும் வரை பாவம் இல்லாமல் இருக்கிறது, மற்றும் பாவமில்லாமல் பிறந்திருக்கிறது. பின்பு கணக்கொப்புவிக்கத்தக்க வயதை அடைந்தபின் விசுவாசிக்கவும், தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பவும்,

கிறிஸ்துவை வாயினாலே அறிக்கை செய்யவும், மேலும் திருமறை போதிப்பதைப் போல பாவ மன்னிப்பிற்கு என்று திருமுழுக்கும் பெற முடிகிறது (மாற்கு 16:16; அப். 17:30; ரோ. 10:10; அப். 2:38). இவை இல்லாமல் ஒரு பாவ மனிதன் இரட்சிக்கப்பட முடியாது. மேலும், நம்பமுடியாத ஒன்றை கிறிஸ்து எப்பொழுதுமே செய்யச் சொல்வதில்லை. பாருங்கள், ஒரு குழந்தை பகுத்தறியவும், சத்தியத்தைக் கற்றுக்கொள்ளவும் முடியாததால், தேவனுடைய கட்டளைகளுக்கு இணங்கக் கூடிய நிலை வரும் வரை, அது பாதுகாப்பாக உள்ளது.

**3. இவ்வுலகில் உள்ள எல்லா திருச்சபைகளும் சரியானவைகளே!, என்பதும் ஒரு கள்ளப் போதனையாகும்.** மேலும், சபை என்பது முக்கிமானதல்ல என்றும் கூறப்படுகின்றது. ஆனால் திருமறை சொல்வது என்னவெனில், ஒரே ஒரு சபை தான் இருக்கிறது; மேலும் அது கிறிஸ்துவுக்கு மிகவும் முக்கியமாகையால் அதற்காக அவர் தன்னுடைய இரத்தத்தையே சிந்தினார் (மத். 16:18; எபே. 4:4; அப். 20:28). அநேக மனிதனால் உண்டாக்கப்பட்ட சபைகள், ஒன்றைப்போல் மற்றொன்று நல்லதே என்பது உண்மைதான்; 'மனிதனால்' உண்டாக்கப்பட்டவைகளைப் பற்றிய கூற்று உண்மைதான்; ஆனால் கிறிஸ்துவினுடைய சபையை அப்படி சொல்ல முடியாது.

**4. 'விசுவாசம் மட்டுமே ஒருவருக்கு இருந்தால், அவர் இரட்சிக்கப்படுவார்' என்பதும் ஒரு தவறானப் போதனை.** அப்படி இருந்தால், ஆண்டவர் ஏன் ஒருவரை மனந்திரும்பவும், அறிக்கையிடவும், திருமுழுக்குப் பெறவும், கிறிஸ்தவ வாழ்வு வாழவும், தேவ செயல்களை செய்யவும் வேண்டும் என கூறுகிறார்? யாக்கோபு 2ம் அதிகாரத்தை வாசியுங்கள். நாம் கட்ட வேண்டியதற்கான அஸ்திபாரம் மட்டுமே தான் விசுவாசம்.

**5. ஒருவர் ஒரு முறை இரட்சிக்கப்பட்டுவிட்டால் (திருமுழுக்குப் பெற்று) எப்பொழுதுமே இரட்சிக்கப்பட்ட நிலையில் தான் (பாவம் செய்தாலும்) உள்ளார் என்பதும் ஒரு தவறான (கள்ளப்) போதனை.** ஒருவர் மரணபரியந்தம் உண்மையாயிருக்க வேண்டும் என கிறிஸ்து கற்பித்துள்ளார் (வெளி. 2:10). ஒருவேளை இரட்சிக்கப்பட்ட ஒருவர் மரணபரியந்தம் உண்மையாயிராவிடில் என்ன? அவர் இரட்சிப்பை இழந்துபோவதில்லையா? உண்மை என்னவெனில், திருமறை எங்குமே, ஒருவர் கிருபையில் இருந்து விழுந்து போவதில்லை என கூறவில்லை, மாறாக

ஒருவர் விழுந்துபோகமுடியும் என கூறுகிறது.

**6. இன்றும் வேதாகமத்து அற்புதங்களை நடப்பிக்க முடியும் என்பது ஒரு கள்ளப் போதனையாகும்.** அப்படி செய்யமுடியும் எனில், எங்கே அவை? சரி அப்படியானால், பைபிளில் உள்ளபடி இன்று ஏன் மரித்தவரை எழுப்புவதில்லை? கைகளும், கால்களும் பிறவியிலே இல்லாதவர்க்கு ஏன் கிடைப்பதில்லை, என இன்னும் பல. இன்று வேதாகம அற்புதங்கள் ஏதும் நடத்தப்படுவதில்லை. இவை ஒரு குறிப்பிட்ட காலம் வரை வசனத்தை உறுதி செய்யவும், அந்த வசனம் தேவனுடையது தான் என மக்கள் ஏற்றுக்கொள்ளவும் நடந்தது. ஆனால் இப்பொழுதோ நமக்கு உறுதி செய்யப்பட்ட வசனம் இருப்பதால், அற்புதங்கள் அவசியமற்றதாயிருக்கின்றது. ஒருவர் வேதாகம வசனத்தை நம்பாவிட்டால், அவர் கண்ணால் காணும் ஒரு அற்புதத்தையும் நம்பமாட்டார் (யோவான் 20:30,31).

**7. தெளிப்பதும், ஊற்றுவதும் கூட ஞானஸ்நானம் (திருமுழுக்கு) தான், என்பதும் ஒரு கள்ளப்போதனையே!** ஞானஸ்நானம் (திருமுழுக்கு) என்பது அடக்கம், மூழ்குதல் என்பதால் அது தெளித்தல் அல்லது ஊற்றுதல் என்பவைகளாக இருக்க முடியும் என்பது தவறு (ரோ. 6:3–4; கொலே. 2:12). நீங்கள் ஒருவேளை தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றிருக்கவில்லையெனில், நீங்கள் ஞானஸ்நானமே (திருமுழுக்கு) எடுக்கவில்லை; மேலும் ஒரே ஒரு ஞானஸ்நானம் தான் வேதாகமத்தின்படி உண்டு (எபே. 4:5).

உண்மையில், இன்னும் அநேக கள்ளப் போதனைகளும் உண்டு. வேதாகமம் அவைகளைப் பற்றி போதிக்கவில்லை என்பதினாலேயே அவை கள்ளப்போதனையாகும். இப்படிப்பட்ட கள்ளப் (தவறான) போதனைகள், எங்கும் தொடர்ச்சியாகப் போதிக்கப்பட்டு, ஆயிரக் கணக்கோனோர் அதை ஏற்றுக்கொள்ளலாம்; அதினால் அது சரியானதாகிவிடாது. யாரோ ஒருவர் அதை சரியானது என்று சொல்வதினாலேயே ஒரு உபதேசத்தை சரியென்று ஏற்றுக் கொள்ளாதீர்; மாறாக, ஒரு உபதேசத்தை சரியென்று பைபிள் போதிப்பதினால் மட்டுமே ஏற்றுக் கொள்ளுங்கள் இல்லையெனில் நீங்கள் வஞ்சிக்கப்பட்டு, இரட்சிப்பை இழந்துவிடக்கூடும்.

# அடிப்படை திருமறை போதனைகள்
## Basic Bible Teachings

இந்த நம்முடைய தொடரின் கடைசிப் பாடத்தில் நாம், அதிகமாக கவனம் செலுத்தப்படாத சில அடிப்படை வேதாகமப் போதனைகளை கவனத்துடன் பார்க்கலாம். இவைகளைப் பற்றி நாம் சிறியதாக பார்க்க இருக்கிறோம். மேற்கொண்டு நீங்களாகவே அவைகளை ஆராயலாம். நாம் இவைகளைப் பற்றி குறைவாக பார்க்க இருப்பதால், இவை மற்ற வேதாகம பாடங்களைவிட மதிப்பு குறைந்தவை அல்ல என்பதை நீங்கள் நினைவில் வைக்க வேண்டும். ஆகையால் இவற்றை கவனமாக படியுங்கள்:

**1. வேதாகமம் (திருமறை) ஒற்றுமையை போதிக்கின்றது:**

நாம் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என கிறிஸ்து ஜெபித்தார் (யோவான் 17). அவருக்கு ஒரு சபை, ஒரு பெயர், ஒரு ஆராதனை, ஒரு இரட்சிப்பின் திட்டம் என்பவைகளே! ஒரு ஆண்டவர், ஒரு விசுவாசம், ஒரு ஞானஸ்நானம், வாழ்வதற்கான ஒரு வழி மற்றும் பரலோகத்திற்கான ஒரு வழி என்பவைகளே உண்டு. எல்லாருமே திருமறையை மட்டும் பின்பற்றுவார்களானால் மேலே சொல்லப்பட்டவைகள் அனைத்திலும் ஒன்று மட்டுமே இருக்கும்.

**2. ஒருவர் கிறிஸ்தவர் ஆவதற்கான நோக்கம்:**

வேலை வாங்குவதற்காகவோ, தொழில் வாய்ப்புகளை பெருக்குவது போன்ற காரணங்கட்காக அல்லாமல், மாறாக, இரட்சிக்கப்படவும், தேவசித்தம் செய்யவும் மற்றவர்கட்கு உதவுவதற்காகவே இருக்க வேண்டும்.

**3. ஒருவர் கிறிஸ்தவராகும் முன்....**

உறுதியுடன் முடிவுகளை எடுக்க வேண்டும். தான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபின் என்ன துன்பம் வந்தாலும், என்ன பொருளாதார நெருக்கடி வந்தாலும், என்ன கடினமான சூழ்நிலைகளை சந்தித்தாலும் ஆண்டவரை பின்பற்ற ஆயத்தமாக இருக்க வேண்டும்.

**4. கிறிஸ்துவுக்குள் வர (அல்லது) கிறிஸ்தவராக மாற....**

ஒரே ஒரு வழி தான் உண்டு, அதுவும் சுவிசேஷத்திற்கு கீழ்படிவதன் மூலமே! மேலும் சுவிஷேசத்திற்கு கீழ்படிவதன் கடைசி செயல் ஞானஸ்நானம் (திருமுழுக்கு) பெறுவதாகும். ஒருவர் கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெறுகிறார் என திருமறை போதிக்கிறது, (ரோமர் 6:3,4). ஆகையால் ஒருவர் கிறிஸ்தவரானால், அவர் கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றபடியினால் கிறிஸ்துவுக்குள் இருக்கிறார். ஒருவர் தண்ணீரில் மூழ்கவில்லையெனில் அவர் கிறிஸ்துவுக்குள் இல்லை; மேலும் அதனால் கிறிஸ்தவராகவும் இல்லை. மேலும் ஒருவர் கிறிஸ்துவுக்குள் மட்டுமே தேவனுடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பெற முடியும் (எபே. 1:3).

**5. மேலும் புதிய ஏற்பாட்டின் படி....**

எல்லா மிருக இறைச்சியும் சுத்தமானவை மற்றும் சாப்பிடத் தகுதியானவை இந்தப்பாடம் அப். 10 மற்றும் 11ம் அதிகாரங்களில் பேதுருவுக்கு கற்றுக்கொடுக்கப்பட்டது. திருமணத்தை தடைசெய்யவும், மாம்சத்தை புசிப்பதற்கு விலகவும் கட்டளையிடும் நாட்கள் வரும் என்று பவுல் கூறுகையில், "ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள். விவாகம் பண்ணாதிருக்கவும், விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளை யிடுவார்கள். தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத் தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்க தல்ல.

அது வேத வசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்." (1 தீமோ.4:1–5). உண்மைதான், பழைய ஏற்பாட்டின் மோசேயின் பிரமாணத்தின் கீழ், தேவன் தன்னுடைய ஜனங்களிடம் சில மாம்சங்களை சாப்பிடுவதை தடை செய்திருந்தார்; ஆனால் புதிய ஏற்பாட்டின் கீழ், அவர் எல்லா மிருக மாம்சங்களையும் சுத்தமானவை என்றும் சாப்பிடத்தகுந்தவை என்றும் கூறுகிறார். ஒரு நபர், சுத்தமற்றவை என்று கூறி சில மிருக மாமிசங்களை ஒதுக்கும்பொழுது என்ன செய்கிறார் என்று உங்களுக்குத் தெரியுமா? அவர் வசனத்தின் மீது தனக்குள்ள அறியாமையையே வெளிப்படுத்துகிறார். ஆனாலும், ஒருவர் ஏதாவது ஒரு மாம்சத்தை சாப்பிட விரும்பவில்லை என்றாலோ, ஏதோ ஒரு மாமிசம் அவருக்கு சுவை

பிடிக்கவில்லை என்றாலோ அவர் அதை சாப்பிடாததைக் குறித்து ஒன்றுமில்லை. அந்த மாம்சத்தை உண்பது பாவம் என்று கூற கூடாது. அது, தேவன் சொல்லாத ஒன்றை கட்டளையிடுவதாகும்; மேலும் அது தவறாகும். ஆனால், அப்படி சாப்பிடாத ஒருவர், மற்றவர்கள் அந்த மாம்சத்தை உண்பது பாவம் என்று கூறக் கூடாது. அது, தேவன் சொல்லாத ஒன்றை கட்டளை யிடுவதாகும்; மேலும் அது தவறாகும்.

**6. விக்கிரகங்களுக்கு முன் மனிதன் வணங்குவதை திருமறை கண்டிக்கின்றது.** ஆனாலும், இவை பொருளினால் ஆன மாம்சப்பிரகாரமான சிலைகளாக மட்டும் இருக்க வேண்டும் என்பதில்லை. மனிதன் தன்னுடைய அதிகப்படியான நேரத்தையும், கவனத்தையும் எதற்குக் கொடுக்கிறானோ அது அவனுக்கு விக்கிரமாகும். அது அவனுடைய வேலையாக இருக்கலாம், பணமாக இருக்கலாம், குடும்பமாக இருக்கலாம் அல்லது வேறு எதுவாகவும் இருக்கலாம். நம்முடைய ஆண்டவர், எப்பொழுதுமே அவரையும் அவருடைய ராஜ்யத்தையும், நாம் முதலிடத்தில் வைத்துக்கொண்டு, நாம் அவரை சேவிக்க வேண்டும் என விரும்புகிறார் (மத். 6:33).

**7. ஒருவர் இந்த உலகத்தில் கிறிஸ்தவராக பிறப்பதில்லை, மாறாக கணக்குக் கொடுக்கக்கூடிய வயததை அடைந்து, சுவிசேஷத்திற்கு கீழ்படியும்போதே அவர் கிறிஸ்தவராக முடியும்.** அநேகர் நினைப்பது என்னவெனில், அவர் தங்களை கிறிஸ்தவரென்று அழைத்துக் கொள்வதினாலும், தங்கள் பெற்றார் கிறிஸ்தவரென பெயர் பெற்றிருப்ப தினாலும் தாங்களும் கிறிஸ்தவராக முடியும் என்று நினைக்கின்றனர்; அனால் அப்படி இருக்க முடியாது.

**8. சுவிசேஷத்திற்கு கீழ்படியும் அனைவரும் பரிசுத்த ஆவியின் வார்த்தை பெறுகின்றனர் (அப். 2:38).** ஆனால், இது ஒருவர் அற்புதம் போன்றவற்றை செய்வதற்கு வல்லமை தருவதல்ல. வேத வசனமானது எழுதப்பட்ட வடிவிலே கொடுக்கப்படும் வரைதான் அற்புதங்கள் கொடுக்கப்பட்டது; இப்பொழுது அவற்றிற்கு அவசியமில்லையாகையால் அவை இல்லாமல் போயின. பரிசுத்த ஆவியானவர் அற்புதம் நடப்பிக்கும் வடிவில் இல்லாமல், ஒருவருக்குள் வாசம் செய்து, ஒருவர் விசுவாசமாயிருக்கவும், தேவனுடன் நெருக்கமாக நடக்கவும் உதவி செய்கின்றார்.

**9. எல்லாருமே மரணம் அடைவோம் என்று திருமறை**

**போதிக்கின்றது (எபி. 9:27).** நன்மையோ தீமையோ, நாம் எதை இந்த சரீரத்தில் செய்தோமோ அவற்றிற்கு ஏற்றாற்போல் எல்லாருமே நியாயத்தீர்ப்பிலே நியாயந்தீர்க்கப்படும்படி நிற்போம் என்றும் போதிக்கின்றது (2 கொரி. 5:10). இதைத்தொடர்ந்து நடப்பதைப் பற்றி திருமறை போதிக்கையில் எல்லாருமே உயிர்த்தெழுந்து, நீதிமான்கள் பரலோகத்திற்கும், ஆனால் தீயவர்கள் நரகத்திற்கும் செல்வார்கள் என்று கூறுகிறது; மேலும் இவை இரண்டும் நித்தியமாக இருக்கும் என்றும் கூறுகிறது (யோ. 5:28,29; மத் 25).

**10. ஏதோ ஒரு நாளில் ஆண்டவர் திரும்பவருவார்; அந்த நாள் எது என்று தேவனைத் தவிர ஒருவருக்கும் தெரியாது (மத். 24:36).** அவர் வரும்போது, இவ்வுலகை நெருப்பினால் அழித்து விடுவார். இவற்றை தான் திருமறை போதிக்கின்றது. இன்னும் அநேக விலையேறப்பட்ட சத்தியங்களை நாம் பார்த்துக்கொண்டே போகலாம்; ஆனாலும் நீங்கள் ஒவ்வொன்றையும் இன்னும் ஆழமாக ஆராய ஏதுவாக தேவையானவை பார்த்தோம். இந்த முயற்சியில் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

பதிவு எண்: | | | | | | | | |

திறவுகோல் : 21–கேள்விகள்

## உங்களுக்கான தேர்வு

(சில கேள்விகளுக்கான பதில்கள் பெரிதாக இருப்பின் கீழே உள்ள வெற்றிடத்தை (Empty Space) பயன்படுத்தவும்)

1. கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும்படி யார் கூடி வரும்படி கட்டளையிடப்பட்டது? ............................................................

2. எப்பொழுது அவர்கள் கூடிவர வேண்டும்? ............................................................
............................................................

3. எப்பொழுதெல்லாம் அவர்கள் கூடிவர வேண்டும்? ............................................................
............................................................

4. இந்தப் பந்தியை கட்டளையிட்டது யார்? ............................................................
............................................................

5. கர்த்தருடைய பந்தி என்றால் என்ன? ............................................................
............................................................

6. அதில் அடங்கியுள்ள இரண்டு பொருட்கள் யாவை? ............................................................
............................................................

7. அப்பம் நமக்கு எதை நினைவு படுத்துகிறது? ............................................................
............................................................

8. திராட்ச ரசத்தில் நாம் பங்குபெறும்போது எதை நினைவுகூருகிறோம்?
............................................................

9. கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்கள் பந்தியை என்னவாக மாற்றினர்?
............................................................

10. கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவது கிறிஸ்துவின் ............................................................ யும், ............................................................ யும் நாம் நினைவுகூர உதவுகிறது.

11. பந்தியின் மூலம் எதை எதிர்நோக்கியிருக்கிறோம்? ....................................
....................................................................................................

12. ஒருவன் அபாத்திரமாய் பங்குபெறுவதன் மூலம் தனக்கு என்ன நிகழ ஏதுவாக அப்பத்திலும், திராட்ச ரசத்திலும் பங்குபெறுகின்றான்? ............
....................................................................................................

13. நாம் எதைச் செய்வதற்குமுன், தேவனோடு எல்லாவற்றையும் சரி செய்து கொள்ள வேண்டும்? ................................................................
....................................................................................................

14. எல்லா ................................ களிலும் பந்தியில் பங்குபெற்று ......................
.............................. நினைவுகூர்ந்து, கிறிஸ்து ................................................ வரைக்கும் செயல்படுத்த வேண்டும்.

15. ஒவ்வொரு வாரத்தின் முதல்தோறும் கர்த்தருடைய பந்தியில் போதியளவு மனதைப் பக்குவப்படுத்தி கிறிஸ்துவை நினைவுகூராமல், வேறெதிலும் நினைவுகூர முடியுமா? .......................................................

16. பிரதி மாதத்திற்கு ஒருமுறை பங்குபெற்றால் போதுமானதா? ..............
....................................................................................................

17. கிறிஸ்தவர்களாகிய நாம், ஒவ்வொரு வாரத்தின் முதல்நாள் தோறும் ........................................ யிலும் ........................................... யிலும் ...................................................................................................திலும் நிலைத்திருக்க ஏதுவாக பந்தியில் பங்குபெற வேண்டும்.

---

பெயர் : ____________________

முகவரி : ____________________

____________________

போன் : ____________________

(உங்கள் நண்பர்கள், உறவினர்கட்கும் இப்பாடங்களை அறிமுகம் செய்யுங்கள்)

பதிவு எண்: | | | | | | | | |

திறவுகோல் : 22–கேள்விகள்

## உங்களுக்கான தேர்வு

(சில கேள்விகளுக்கான பதில்கள் பெரிதாக இருப்பின் கீழே உள்ள வெற்றிடத்தை (Empty Space) பயன்படுத்தவும்)

1. "காணிக்கை கொடுப்பது" திருமறை கூறும் பாடமா?
...................................................................................

2. யார் கொடுக்க வேண்டுமென கட்டளையிடப்பட்டுள்ளது?
...................................................................................

3. நாம் எப்பொழுதெல்லாம் கொடுக்க வேண்டும்?

4. பிரிவினைச் (நாமகர்ணக் கூட்ட) சபைகள் எப்பொழுதுதெல்லாம் காணிக்கை பெறுவதை வழக்கமாக கொண்டுள்ளனர்?
...................................................................................

5. இதற்கு வசன ஆதாரம் உண்டா? ..............................................

6. அனைத்து கிறிஸ்தவர்களுமே கொடுக்கும்படி கட்டளையிடப் படுகிறதா? ..........................................

7. நாம் எவைகளைக் கொடுக்க வேண்டும்? ..........................................

8. ஒரு வாரம் முழுவதும் ஒருவர் எதையும் வருமானமாக பெறாதிருந்தாலும், அவர் கொடுப்பதற்குட்பட்டவரா?
...................................................................................

9. நாம் தேவனை.......................................படிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

10. மோசேயின் பிரமாணத்தின் கீழ் ஒவ்வொருவரும் எவ்வளவு கொடுக்கும்படி கட்டளையிடப்பட்டது? ..........................

11. கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் வாழ்கிற நாம் ஏன் அதிகமாக கொடுக்க வேண்டும்? ..........................................

12. நாம் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் ஏன் தவறாமல் கொடுக்க வேண்டும்? ..........................................

13. நாம் சிறுக விதைத்தால் எப்படி அறுப்போம்? ..........................................

14. நாம் நமது இருதயத்தில்..........................................படியே கொடுக்கவேண்டும்.

15. நாம் கட்டாயமாக கொடுக்க வேண்டுமா? ..........................................

16. .......................................... கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

17. .......................................... பார்க்கிலும், .......................................... பாக்கியம்.

18. வசனத்தின்படி ஒருவன் கொடுக்காதிருந்தால். தன்னை கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொள்ள கூடுமா? ..........................................

19. நாம் கொடுப்பதினால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் என்ன? ..........................................

---

பெயர் : ______________________

முகவரி : ______________________

______________________

போன் : ______________________

(உங்கள் நண்பர்கள், உறவினர்கட்கும் இப்பாடங்களை அறிமுகம் செய்யுங்கள்)

பதிவு எண்: | | | | | | | | |

**திறவுகோல் : 23–கேள்விகள்**

## உங்களுக்கான தேர்வு

(சில கேள்விகளுக்கான பதில்கள் பெரிதாக இருப்பின் கீழே உள்ள வெற்றிடத்தை (Empty Space) பயன்படுத்தவும்)

1. இந்த மாம்ச உலகில் ஒருவன் கிறிஸ்தவனாக பிறக்கிறானா? ..........................................

2. ஒருவன் எப்படி கிறிஸ்தவனாகிறான்? ..........................................

3. யாருக்கு புதிய ஏற்பாட்டின் பெரும்பகுதி வழி காட்டுகிறது? ..........................................

4. நாம் .........................................., .......................................... கர்த்தருடைய கிரியையிலே பெருகுகிறவர்களாயும் இருக்க வேண்டும்.

5. கிறிஸ்தவன் தன் சக கிறிஸ்தவர்களுடன் ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் .......................................... கூடி வருதலை விட்டு விடக் கூடாது.

6. மாசில்லாத சுத்தமான பக்தி என்பது, .......................................... விசாரிக்கிறதையும் உள்ளடக்கியது.

7. கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தை என்ன செய்ய வேண்டும்? ..........................................

8. கிறிஸ்தவத்திலுள்ள இரண்டு பக்கங்கள் யாவை? .......................................... ..........................................

9. தீமையிலிருந்து விலகியிருப்பது மட்டும் நமக்கு போதுமானதா?

10. நற்கிரியை செய்வதால் மட்டும் நாம் போதுமானதைச் செய்கிறோம? ..........................................

11. மாம்சத்தின் கிரியைகள் சிலவற்றைக் கூறுக ..........................................

12. ஆவியின் கனிகள் சிலவற்றைக் கூறுக ..........................................

12. கெட்ட குமாரன் கதையில் வரும் தகப்பன் யாரைக் குறிக்கிறது? ..........................................

13. குமாரன் யாரைக் குறிக்கிறது? ..........................................

14. தனது தகப்பனுடைய பாதுகாப்பிலிருந்து விலகிப் போக குமாரன் செய்தது என்ன? ..........................................

15. தனது தப்பிதங்களை உணர்ந்த போது அவன் செய்தது என்ன? ..........................................

16. அவனுடைய தகப்பன் என்ன செய்தான்? ..........................................

17. ஒரு கிறிஸ்தவன் என்ன செய்யும்போது இழந்தவனாகிறான்? ..........................................

18. அவன் தன் நிலையில் தொடருவானானால் அவனுக்கு என்ன நடக்கும்? ..........................................

19. கர்த்தருக்கென்று மறுபடியும் வாழும்படிக்கு அவன் என்ன செய்ய வேண்டும்?

20. ஜீவ கிரீடத்தை ஒருவன் பெற செய்ய வேண்டியது என்ன? ..........................................

---

பெயர் : ____________________

முகவரி : ____________________

____________________

போன் : ____________________

(உங்கள் நண்பர்கள், உறவினர்கட்கும் இப்பாடங்களை அறிமுகம் செய்யுங்கள்)

பதிவு எண்: | | | | | | | | |

திறவுகோல் : 25–கேள்விகள்

## உங்களுக்கான தேர்வு

(சில கேள்விகளுக்கான பதில்கள் பெரிதாக இருப்பின் கீழே உள்ள வெற்றிடத்தை (Empty Space) பயன்படுத்தவும்)

1. உபவாசிப்பது ஒரு புதிய காரியமா? ..........................................

2. உலகமுழுவதும் இது ஒரு பொதுவான அனுசரிப்பா?

..........................................................................................................

3. உபவாசிப்பதில் மிகைப்படுத்துதல் தவறானதா?

..........................................................................................................

4. அநேகர் யார் காண வேண்டும் என்று உபவாசிக்கின்றனர்? ..........................................

5. இதில் தேவன் பிரியப் படுகிறாரா? ..........................................

6. பகலில் உபவாசமிருந்துவிட்டு, இரவெல்லாம் உணவு உண்பது உண்மையான உபவாசமா? ..............................

7. கிறிஸ்து எப்பொழுதாவது உபவாசித்தாரா? ..........................................

8. மாயக்காரர் எப்படி உபவாசிப்பதாக கிறிஸ்து குறிப்பிட்டார்? ..........................................

9. இயேசு தமது சீஷர்களை எப்படிப்பட்டவர்களைப் போல இருக்க வேண்டாம் என எச்சரித்தார்? ..................................

10. தேவனுக்குத் தெரியும்படி அதே நேரத்தில் நமது உபவாசம் வெளிப்படையாய் காணக் கூடியதாயிருக்க வேண்டுமா? ..........................................

11. கிறிஸ்தவர்கள் எந்த ஒரு நிகழ்ச்சியிலாகிலும் உபவாசிக்கும்படி கூறப்பட்டனரா? ..........................................

12. உபவாசம் ஆராதனையில் ஒரு பகுதியா? ........................................

13. உபவாசிப்பது தவறா? ........................................

14. எந்த இரண்டு காரியங்களை செய்யாத பட்சத்தில் அது பிரயோஜனமற்றது? ........................................

15. உபவாசத்தினால் பிரதானமாய் பலனடைவது யார்? ........................................

16. இன்று கிறிஸ்தவர்கள் ஏன் உபவாசிக்க வேண்டும்? ........................................

17. இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள் உபவாசிக்கின்றனரா? ........................................

18. உபவாசமிருப்பதில் உள்ள சில வீணான காரணங்கள் யாவை? ........................................

19. நாம் நேர்மையாய் (உண்மையாய்) உபவாசிக்கும்போது, அதினால் தேவனிடத்தில் கிட்டிச் சேரத்தக்கதாகக் கிடைக்கும் சில நன்மைகள் யாவை? ........................................

---

பெயர் : ____________________

முகவரி : ____________________

____________________

போன் : ____________________

(உங்கள் நண்பர்கள், உறவினர்கட்கும் இப்பாடங்களை அறிமுகம் செய்யுங்கள்)

பதிவு எண்: | | | | | | | | |

**திறவுகோல் : 26–கேள்விகள்**

## உங்களுக்கான தேர்வு

(சில கேள்விகளுக்கான பதில்கள் பெரிதாக இருப்பின் கீழே உள்ள வெற்றிடத்தை (Empty Space) பயன்படுத்தவும்)

1. எக்காலம் முதல், மனிதனிடம் திருமணம் நடைமுறையில் உள்ளது?....................

2. தேவன் ஏன் ஸ்திரியை உண்டாக்கினார்?........................

3. ஆதாமின் எலும்பிலிருந்து படைக்கப்பட்டது, ஏன் ஸ்திரி (பெண்) என அழைக்கப்பட்டது? ........................................

4. ஒரு மனிதன் திருமணம் செய்தால், அவர் தன் ............ தன் ............ விட்டு ................. உடன் இணைந்திருக்கவேண்டும்.

5. எந்த ஒரு காரணத்திற்காகிலும் தன் மனைவியை ஒரு மனிதன் தள்ளிவிடலாமா? ................................

6. தேவன் இணைத்ததை மனிதன் ...............

7. மோசேயின் சட்டம் ஏன் விவாகரத்தை அனுமதித்தது? .................

8. அது ஆரம்ப முதல் தேவனுடைய நோக்கமா? .......................

9. விவகாரத்திற்காக ஏற்றுக் கொள்ளப்படும் ஒரே காரணம் என்ன? ..................................

10. திருமணத்திற்கான தேவனுடைய சட்டத்தை ஒருவர் மீறினால் ஒருவர் என்ன பாவம் செய்கிறார்? ............................

11. திருமணத்தை ஏற்படுத்தியது யார்? ......................

12. திருமணத்தில், மனிதனும் மனுஷியும் ..................... ஆகின்றனர்.

13. திருமண வாழ்வு எவ்வளவு நாள் நீடிக்க வேண்டும்? ........................

14. தன் வாழ்க்கை துணை மரித்த பின், ஒருவர் மறுமணம் செய்து கொள்ளலாமா ? ......................

15. ஒருவர் ஒன்றிற்கும் மேற்பட்ட வாழ்க்கை துணையை வைத்துக் கொள்ளலாமா? ....................

16. எப்பொழுதாவது மோசேயின் சட்டத்தின்படி, ஒன்றிற்கும் மேற்பட்ட மனைவிகள் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் கூட, இன்று நாம் அந்த சட்டத்தின்படி வாழ்கின்றோமா? ..........................

17. கிறிஸ்துவின் பிரமாணம், ஒரு மனிதன் பல மனைவிகளை வைத்துக் கொள்வதை அனுமதிக்கின்றதா?

18. திருமணத்தின் நோக்கம் என்ன? ....................

19. கணவனும், மனைவியும் ஒருவரை ஒருவர் ........................ கட்டளையிடப்பட்டுள்ளனர்; மேலும் தங்கள் பிள்ளைகளை அவர்கள் .................. மற்றும் ...................... .

---

பெயர் : ______________________________

முகவரி : ______________________________

______________________________

போன் : ______________________________

(உங்கள் நண்பர்கள், உறவினர்கட்கும் இப்பாடங்களை அறிமுகம் செய்யுங்கள்)

பதிவு எண்: | | | | | | | | |



## உங்களுக்கான தேர்வு

(சில கேள்விகளுக்கான பதில்கள் பெரிதாக இருப்பின் கீழே உள்ள வெற்றிடத்தை (Empty Space) பயன்படுத்தவும்)

1. உண்மையான கிறிஸ்தவர்கள் மத பண்டிகைகளை அனுசரிப்பார்களா?

 ............................

2. ஏன் செய்வதில்லை? ............................

3. பவுல், கலாத்தியர்களுக்கு கூறியது என்ன? ........................

4. கிறிஸ்துவின் பிறந்த தினத்தை நாம் கொண்டாட வேண்டும் என வேதாகமம் போதிக்கின்றதா? ..............................

5. கிறிஸ்து எந்த நாளில் உண்மையில் பிறந்தார் என நமக்கு தெரியுமா?

 ..............................

6. "கிறிஸ்துமஸ்" என்னும் கொண்டாட்டத்தை யார் துவங்கியது? ..............

7. எந்த மத பண்டிகையிலிருந்து கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் வந்தது?

 ..............................

8. "ஈஸ்டர்" என்று அழைக்கப்படும் கொண்டாட்டம் உண்மையில் என்ன?

 .........................

9. லெந்து காலங்களில் மக்கள் செய்வது என்ன? .....................

10. இப்படி அனுசரிப்பதற்கு வேதாகம ஆதாரம் எது? ........................

11. "ஈஸ்டர்" பண்டிகையின் ஒரு பகுதியான சில மூடத்தனமான பாரம்பரிய பழக்கங்கள் எவை? ..................

12. எந்த பண்டிகையின் வளர்ச்சி (மறு உருவம்) "ஈஸ்டர்" பண்டிகையாகும்? ...............................

13. ஆண்டவரின் உயிர்தெழுலை கிறிஸ்தவர்கள், என்று அனுசரிக்கும்படி வேதாகமம் கூறுகிறது? .............................

14. மதப்பண்டிகைகளை அனுசரிப்பதை, மக்கள் நியாயப்படுத்து கின்றனரா? ............................

15. இப்படி செய்ய முடியுமா? .................

16. வெறும் பாரம்பரியத்தினாலான இவைகளில் இருந்து நம்மைக் காத்துக் கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்? ...........................

17. ஒரு மனிதன் மதப்பண்டிகைகளை அனுசரிப்பானேயானால் அவர் உண்மையான கிறிஸ்தவரா? .......................

---

பெயர் : ______________________________

முகவரி : ______________________________

______________________________

போன் : ______________________________

(உங்கள் நண்பர்கள், உறவினர்கட்கும் இப்பாடங்களை அறிமுகம் செய்யுங்கள்)

பதிவு எண்: | | | | | | | | |

திறவுகோல் : 28–கேள்விகள்

## உங்களுக்கான தேர்வு

(சில கேள்விகளுக்கான பதில்கள் பெரிதாக இருப்பின் கீழே உள்ள வெற்றிடத்தை (Empty Space) பயன்படுத்தவும்)

1. இன்று மனிதனால் உபயோகப்படுத்தப்படும் அநேக மதப் பட்டங்கள் தேவனால் கண்டிக்கப்பட்டவையா? ..................................................

2. ஏன் அவை வசனத்திற்கு புறம்பானவை? ..................................................

3. இப்படிப்பட்ட பட்டங்கள் ஏன் பயன்படுத்தப்படுகின்றன? ..........................

4. ......................................னுடைய ...................................... ஆக, உலகத்தில் எந்த ஒரு மனிதனும் இருக்க முடியாது.

5. அப்படியானால், சபையினுடைய தலைவர் யார்? ..........................................

6. கிறிஸ்துவை, அவருடைய அதிகாரம் மற்றும் மகிமை என்னும் நிலையில் இருந்து கீழே தள்ளிவிட நினைக்கும் மனிதனுக்கு என்ன பட்டம் கொடுக்கலாம்? ..........................................................

7. கிறிஸ்துவினுடைய ஒவ்வொரு சபையிலும் எந்த வகையிலான வழிநடத்துவத்துவம் வேதத்தின்படி காணப்பட வேண்டும்? ...............................

8. முழு சபையையும் ஏதோ ஒரு கூட்ட மக்கள் ஆளுகை செய்வது வசனத்தின்படியானதா?

9. சபையினுடைய மூப்பராவதற்கு ஒருவருக்கு இருக்க வேண்டிய தகுதிகளில் ஒன்று என்ன? ..........................................

10. "பூமியிலே ஒருவனையும் உங்கள் ................................ என்று சொல்லாதிருங்கள்: பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்கு பிதாவாயிருக்கிறார்".

11. ஏதோ ஒரு மனிதனை கிறிஸ்தவத்தில், "ஃபாதர்" என்று அழைப்பவர்கள் எதற்கு கீழ்படியாமலிருக்கின்றனர்? ...............................

12. மனிதர்கள் மத்தியில் .................... என்ற பட்டம் கண்டிக்கப்பட்டள்ளது?

13. நாம் ஏன் "ரபீ" என்று அழைக்கப் படக்கூடாது? ........................................

14. வசனத்தின்படி, மனிதன் "ரெவரென்டு" என்று அழைக்கப்படாலாமா? ........................................

15. "பரிசுத்தமும், பயங்கரமுமானது (Reverend) அவருடைய நாமம்" என்பது யாரைக் குறிக்கின்றது? ..............................................

16. தங்களை "ரெவரெண்டு" என்று அழைக்க விரும்புவர்கள் யாருக்கு இணையாக இருக்க விரும்புகின்றனர்? ..................................

---

பெயர் : ____________________________

முகவரி : ____________________________

____________________________

போன் : ____________________________

(உங்கள் நண்பர்கள், உறவினர்கட்கும் இப்பாடங்களை அறிமுகம் செய்யுங்கள்)

பதிவு எண்: ☐☐☐☐☐☐☐☐



## உங்களுக்கான தேர்வு

(சில கேள்விகளுக்கான பதில்கள் பெரிதாக இருப்பின் கீழே உள்ள வெற்றிடத்தை (Empty Space) பயன்படுத்தவும்)

1. மதத்தின் பெயரினால் சொல்லிக் கொடுக்கப்படும் எல்லாமே உண்மையா? ..........................................

2. ஒரு உபதேசம் சரியானது தான் என நாம் எப்படி அறிய முடியும்? ...................................

3. நாம் என்ன செய்யவேண்டும் என யோவான் வலியுறுத்துகிறார்? .............................

4. ஏன் சில போதனைகள் தவறானவை? ........................................................

5. ..................... கூட்டத்தினர் இரட்சிக்கப்படவும், ........................ கூட்டத்தினர் இரட்சிப்பை இழந்து போகவும் தேவன் முன்தீர்மானித்துள்ளார்.

6. ஒவ்வொருவரும் எந்தக் கூட்டத்தில் இருக்க வேண்டும் என யார் தீர்மானிக்க வேண்டும்? ....................................

7. நாம் நன்மை செய்யவோ, அல்லது தீமை செய்யவோ தெரிந்தெடுக்க முடியவில்லையெனில், எல்லா அறிவுரைகளும் எழுத்துக்களும் கட்டளைகளும் ...................................................

8. குழந்தைகள் பாவத்துடன் தான் பிறக்கின்றதா? ..................................

9. தான் பாவத்துடன் தான் பிறந்ததாக தாவீது கூறினாரா? ......................

---

பெயர் : ______________________________

முகவரி : ______________________________

______________________________

போன் : ______________________________

(உங்கள் நண்பர்கள், உறவினர்கட்கும் இப்பாடங்களை அறிமுகம் செய்யுங்கள்)

பதிவு எண்: | | | | | | | | |

திறவுகோல் : 30–கேள்விகள்

## உங்களுக்கான தேர்வு

(சில கேள்விகளுக்கான பதில்கள் பெரிதாக இருப்பின் கீழே உள்ள வெற்றிடத்தை (Empty Space) பயன்படுத்தவும்)

1. கிறிஸ்து எதற்காக ஜெபித்தார்? ..........................................

2. தேவனுடைய திட்டத்தில் 'ஒன்று' மட்டுமே உள்ள சில காரியங்களை பட்டியலிடுக ..............................................................

3. ஏன் ஒருவர் கிறிஸ்தவராக வேண்டும்? ..............................................

4. ஒருவர் கிறிஸ்தவராவதற்கு முன் என்ன செய்ய வேண்டும்? ..............................................................

5. கிறிஸ்துவுக்காக அவர் எதில் நிலைத்திருக்க ஆயத்தமாயிருக்க வேண்டும்?...............................................

6. ஒருவர் எவ்வாறு கிறிஸ்துவுக்குள்ளாக முடியும்? ..................................

7. சுவிசேஷத்திற்கு கீழ்படிவதில் உள்ள இறுதி செயல் என்ன? ....................

8. ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் யாருக்குள் இருக்கிறது? ........................................

9. அப்போஸ்தலர் 10 மற்றும் 11ம் அதிகாரங்களில் பேதுருவுக்கு என்ன பாடம் கற்பிக்கப்பட்டது?..................................................

10. மாம்சத்தை சாப்பிடுவதைப் பற்றி பவுல் என்ன கூறினார்? ........................

11. சில மாம்சங்களை சாப்பிடக்கூடாது என தடைசெய்வது என்பது தேவ கட்டளையிடாத ஒன்றை ........................................ ஆகும்.

12. மனிதன் எதை ஆராதிக்க தடை செய்யப்பட்டுள்ளான்? ..........................

13. நமக்கு விக்கிரகங்களாக மாறக்கூடிய சில காரியங்களை கூறுக......................................................................................

14. நாம் எப்பொழுதுமே தேவனை ...............

15. நாம் எல்லோரும் ..................................... மற்றும் எல்லோரும் ............................முன் நிற்க வேண்டும்.

16. எவ்வளவு காலம் வானமும், பூமியும் நிலைத்திருக்கும்? .......................................

17. கிறிஸ்து, தான் திரும்பி வரும்போது என்ன செய்வார்? ..........................

18. சுவிஷேசத்திற்கு கீழ்ப்படியும் யாவரும் என்ன பெறுவார்கள்? ................................................

19. பரிசுத்த ஆவியானவர் நமக்கு எவ்வாறு உதவி செய்கிறார்? ....................................................

20. ஒருவர் எவ்வாறு கிறிஸ்தவராகிறார்? ........................................................

21. தேவனுடைய வார்த்தையின்படி, நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? ...........................................................

---

பெயர் : ____________________

முகவரி : ____________________

____________________

போன் : ____________________

(உங்கள் நண்பர்கள், உறவினர்கட்கும் இப்பாடங்களை அறிமுகம் செய்யுங்கள்)